# நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சியினால் (NDB/“வங்கி”) குறிப்பாகத் தரப்பட்டுள்ள அளவுவரை தவிர, கணக்குவைத்திருப்பவரினால் அதே பெயரில் (பெயர்களில்) இதன்பின்னர் திறக்கப்பட்ட அல்லது தொடர்ந்து நடாத்தப்பட்ட எத்தன்மையினதுமான ஒவ்வொரு கணக்குக்கும் (“கணக்கு”) இந்நியதிநிபந்தனைகள் (“நியதிநிபந்தனைகள்”) ஏற்புடையனவாதல் வேண்டும்.

அத்தகைய ஏதேனும் கணக்கை / கணக்குகளை வங்கி திறப்பதன் அத்துடன் / அல்லது தொடர்ந்து நடாத்துவதன் அத்துடன் / அல்லது எனக்கு / எமக்கு வங்கித்தொழில் வசதிகளை வழங்குவதன் பிரதிபயனாக, கணக்கு வைத்திருப்பவராகிய / வைத்திருப்பவர்களாகிய நான் / நாம் இந்நியதிநிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகிறேன் / உடன்படுகின்றோம். ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் கணக்கு / கணக்குகள் திறக்கப்படுமிடத்து, “நான்”, “எனக்கு” அல்லது “எனது” என்பன, “நாம்”, “எமக்கு” அல்லது “எமது” என வாசிக்கப்படுதல் வேண்டும். இந்நியதிநிபந்தனைகள், ஒவ்வொருவரையும் தனிப்பட்டமுறையில் அல்லது அவர்களின் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள் மற்றும் சாட்டுதற்காரர்களுள் எவரேனுமொருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரை அல்லது அவர்கள் எல்லோரையும் கூட்டாகப் பிணித்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுக் கணக்குவைத்திருப்போரின் எல்லா உடன்படிக்கைகளும், கடப்பாடுகளும் மற்றும் பொறுப்புக்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ளன.

ஒருமைக்கான குறிப்பீடுகள் பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலை உள்ளடக்குதலும் வேண்டும்.

## 1. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

i. முரணான எழுத்திலான அறிவித்தலை வங்கிக்கு கணக்கு வைத்திருப்பவர் வழங்கும் அத்தகைய காலம் வரை, தனிநபர் கணக்குத் திறத்தல் படிவத்திலும் எவையேனும் மேலதிக தனிநபர் கணக்குத் திறத்தல் படிவங்கள் எவையேனுமிருப்பின் அவற்றிலும் (“பொறுப்பாணை”) வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க வரையப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பமிடப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது ஆவணங்கள் மீது செயலாற்றும்படி வங்கிக்குப் பின்வருவனவற்றுக்காக கணக்கு வைத்திருப்பவர் அதிகாரமளிக்கின்றார்;

(அ)காசோலைகள், நாணய மாற்றுண்டியல்கள் , வாக்குறுதிப் பத்திரங்கள், நிலையியற் கட்டளைகள், நேரடிப் பற்றுகள், வரைவுகளின் வழங்குகை, அஞ்சல் மற்றும் தந்தி வழிப் பரிமாற்றங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்தல், பிணையங்களினதும் வெளிநாட்டு நாணயத்தினதும் கொள்வனவுகளும் விற்பனைகளும், வரவாக அல்லது வேறு வகையாகக் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதற்கான வேறு எவையேனும் அறிவுறுத்தல்களும் , மீதியை உறுதிப்படுத்துவதற்காகக் கோருதலும், அத்துடன்

(ஆ) கணக்கை (கணக்குகளை) மூடிவிடுவதற்கான அறிவுறுத்தல்கள் உட்பட, கணக்கு (கணக்குகள்) தொடர்பான வேறு எவையேனும் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளுதல். கூட்டுக் கணக்கின் விடயத்தில், கணக்கை மூடிவிடுவதற்கான

அறிவுறுத்தல்கள், பொறுப்பாணையில் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பொருட்படுத்தாது (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்) எல்லாக் கூட்டுத்திறத்தவர்களினாலும் வழங்கப்படுதல் வேண்டும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏதேனும் மாற்றம் அல்லது இல்லாதொழிப்பு, கணக்குக்கான எல்லாக் கணக்கு வைத்திருப்பவர்களினாலும் கூட்டாகக் வழங்கப்படுதல் வேண்டும்.

**2. நடைமுறைக் கணக்கு / சேமிப்புக் கணக்கு / நிலையான வைப்புக்கள் / அழைப்பு வைப்புக்கள் / NDB சேமிப்புத் திட்டம்**

(i) வங்கியானது அதன் தனித் தற்றுணிபின் படி, நடைமுறைக்கணக்கின் விடயத்தில் கணக்குவைத்திருப்பவருக்கு காசோலைப் புத்தகத்தை வழங்கலாம். காசோலைப் புத்தகம் வழங்கப்படின், எல்லா நேரங்களிலும் அதன் காப்பான கட்டுக்காப்புக்குப் பொறுப்பாகவிருப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார் என்பதுடன், அத்தகைய காசோலைப் புத்தகம் அல்லது, அதன்கண் அடங்கியுள்ள ஏதேனும் காசோலை இதழ் / இதழ்கள் காணாமற்போனால் அல்லது திருடப்பட்டால் அதுபற்றி கணக்குவைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்கு அறிவிப்பார். கணக்கில் தேறிப் பெறப்பட்ட நிதிகளுக்கு எதிராகக் காசோலைகளை வழங்குவதற்கும் கணக்குவைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார். இயைபான காசோலையை(காசோலைகளை) கணக்குவைத்திருப்பவர் தொலைத்திருக்கும் விடயங்களில் அல்லது, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டு வங்கியினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வேறு சூழ்நிலைகளில், வங்கி அதன் தனித் தற்றுணிபின்படி ஏதேனும் காசோலை நிறுத்துகை அறிவுறுத்தலை (ஒன்றில் வாய்மொழி மூலமாக அல்லது எழுத்தில்) கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளலாமென்பதை கணக்கு வைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார். எவையேனும் வாய்மொழி மூலமான கோரிக்கைகள் அதே நாளன்று எழுத்திலான உறுதிப்படுத்துகை மூலம் தொடரப்படுதல் வேண்டும். கணக்குவைத்திருப்பவரிடமிருந்து அல்லது கணக்குவைத்திருப்பவர் எனக் கொள்ளப்படுகின்ற வேறோர் ஆளிடமிருந்து அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலை வங்கி ஏற்றுக்கொண்டால், அதன் விளைவாக அல்லது அது சம்பந்தமாக வங்கியினால் ஏற்கநேர்ந்த ஏதேனும் இழப்பு,சேதங்கள், செலவு தொகைகளுக்கு எதிராக (எவையேனும் சட்டச் செலவு தொகைகளுட்பட) அல்லது கோரிக்கைகளுக்கு எதிராக அதற்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு இத்தால் கணக்கு வைத்திருப்பவர் பொறுப்பேற்கிறார்.

(ii) கணக்கு வைத்திருப்பவர் இயன்றளவு வரை பொய்யானதாக்குதல் தடுக்கப்படும் அத்தகைய முறையில் எவையேனும் காசோலைகளை வரைதல் வேண்டும். ஆதலால் காசோலை எத்தொகைக்காக வழங்கப்படுகின்றதோ அத்தொகை, உடனடிக் கண்டுபிடிப்பின்றி எண்களின் அல்லது சொற்களின் ஏதேனும் சேர்க்கை இயன்றதல்லாததாகவிருக்கும் அத்தகையதொரு வழியில் சொற்களிலும் எண்களிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(iii) கணக்கு வைத்திருப்பவர் காசோலைப் புத்தகத்தை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டியிராதபட்சத்திலும் கணக்கு மூடப்படும் விடயத்திலும், இயன்றளவு விரைவாக காசோலைப் புத்தகத்தை / எல்லாப் பயன்படுத்தப்படாத காசோலை இதழ்களையும் வங்கிக்குத் திருப்பி ஒப்படைப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் கடப்பாடுடையவராவார்.

(iv) காசோலை வைப்புப் பெட்டிகளினால் அல்லது வங்கியினால் பயன்படுத்தப்படும் வேறு ஏதேனும் பொறியினால் வழங்கப்படும் தற்காலிக அறிவித்தல் எவ்வாறிருப்பினும், NDB வங்கி எச்சூழ்நிலைகளின் கீழும் அல்லது எத்தகையதுமான எக்காரணத்துக்காகவேனும், காசோலை வைப்புப் பெட்டிகளினுள் வைப்பிலிடப்பட்டதாகச் சொல்லப்பட்ட காசோலைகள் தொடர்பில் அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகள் கணக்கு வைத்திருப்பவரின் கணக்குக்கு (கணக்குகளுக்கு) வரவு வைக்கப்பட்டிருந்தாலொழிய, எவையேனும் உரிமைக் கோரிக்கைகளை ஏற்றுக்

கவனித்தலாகாது.கணக்கு வைத்திருப்பவரின் கணக்குக்கு (கணக்குகளுக்கு) வைப்பிலிடப்பட்ட காசோலைகள் சேகரிப்புக்காக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பணஞ் செலுத்தும் வங்கியினால் தீர்வுசெய்யப்படும் வரை வரும்படிகள் மீளப் பெறப்படுவதற்குக் கிடைக்கக்கூடியனவாகவும்மாட்டாது. நிதிகள் கிடைக்கக்கூடிய திகதி, சுட்டிக்காட்டுகை நோக்கங்களுக்காக மட்டுமே காட்டப்படுகின்றது.

(v) காசோலைகள், பணக் கட்டளைகள் முதலியன வங்கியின் தற்றுணிபில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(vi) மேற்படி கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக எழுகின்ற ஏதேனும் மேலதிகப்பற்றுக்காக அல்லது வேறு வசதிகளுக்காக கணக்குவைத்திருப்பவா் பொறுப்பாகவிருப்பார் என்பதுடன், வங்கியினால் அதன் தனித் தற்றுணிபின் படி காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களில் அது சம்பந்தமாக ஏற்கநேர்ந்த எல்லா அல்லது ஏதேனும் வட்டியை (கூட்டு வட்டியுட்பட) தரகுப்பணத்தை மற்றும் வேறு வங்கித்தொழில் விதிப்பனவுகளை, செலவு தொகைகளை மற்றும் செலவுகளை (எவையேனும் சட்டச் செலவு தொகைகளுட்பட) அத்தகைய ஏதேனும் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்றுவைக்கும்படி இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.வங்கியினால் அதன் தற்றுணிபின்படி தேவைப்படுத்தப்படக் கூடியவாறான முறையிலும் அத்தகைய நேரங்களிலும் அத்தகைய எவையேனும் தொகைகளை வங்கிக்குச் செலுத்துவதற்கு கணக்குவைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார்.

(vii) மேற்படி கணக்குடன்(கணக்குகளுடன்) சம்பந்தப்பட்ட ஏதேனும் மேலதிகப்பற்று அல்லது வேறு எவையேனும் வங்கித்தொழில் வசதிகள் நடைமுறையிலிருக்கையில் அதற்கு வரவுவைக்கப்பட்ட எவையேனும் மற்றும் எல்லாத் தொகைகளும், வட்டி முழுமையாகச் செலுத்தப்படும் வரை செலுத்தப்படத்தக்கதான (கூட்டுவட்டியுட்பட) ஏதேனும் வட்டியைக் குறைப்பதற்கு முதலில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். அதன்பின்னர், அவ்வாறு வரவு வைக்கப்பட்ட அத்தகைய எவையேனும் தொகைகள் அத்தகைய ஏதேனும் மேலதிகப்பற்றின் அல்லது வேறெவையேனும் வங்கித்தொழில் வசதிகளின் முதல் தொகையைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(viii) வங்கியானது, கணக்கு தொடர்பில் அல்லது வங்கியினால் கணக்குவைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட வேறெவையேனும் வங்கித்தொழில் வசதிகள் தொடர்பில் வங்கியின் இணையத்தளத்தில் அவற்றை வெளியிட்டதன் பின்னர் வழக்கமுறையான எல்லா வங்கித்தொழில் மற்றும் வேறு விதிப்பனவுகளையும் செலவுகளையும் அறவிடுவதற்கும் அல்லது விதிப்பதற்கும் வங்கியின் வழமையான வங்கித்தொழில் நடவடிக்கைமுறைகளுக்கு இணங்க இயைபான கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதற்கும் எப்போதும் உரித்துடையதாதல் வேண்டும். எவையேனும் அல்லது எல்லாக் கணக்குகளும் முடிவுறுவதன் மேல் / மூடிவிடப்படுவதன் மேல் அத்தகைய விதிப்பனவுகள்மீளளிக்கப்படத்தக்கதல்ல என கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

(ix) சொல்லப்பட்ட கணக்கின் வரவிற்கு இடப்பட்ட ஏதேனும் வைப்பு மற்றும் சொல்லப்பட்ட கணக்குக்கு வைக்கப்பட்ட பற்றுகள், இலங்கையில் காலத்துக்குக்காலம் பயனுள்ளனவான சட்டங்களினால் ஆளப்படுகின்றனவென்றும் வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க ஆளடையாளம் பற்றிய சான்று காண்பிக்கப்படுவதற்கு அமையவும், காலத்துக்குக் காலம் வங்கியினால் அறவிடப்படக்கூடிய எவையேனும் வழக்க முறையான விதிப்பனவுகள் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு அமையவும் வங்கியின் ஏதேனும் கிளையில் செலுத்தப்படத்தக்கதென்றும் கணக்குவைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார்.

(x) ஏதேனும் சேமிப்பு / வைப்புக் கணக்கு / கணக்குகள் மீது செலுத்தப்படத்தக்கதான ஏதேனும் வட்டிவீதம், வருடாந்த பயன்பாட்டு வீதம் (AER), ஈட்டுகை வீதம், இலாபப் பகிர்வு விகிதம் (ஏற்புடையவாறு)

வங்கியினால் இலங்கையிலுள்ள அதன் கிளைகளில் / வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுமென்பதுடன், கணக்கு வைத்திருப்பவருக்கு முறையான அறிவித்தலாக அமைதலும் வேண்டும்.

(xi) சேமிப்புக் கணக்குகள் மீதான வட்டி நாளாந்த மீதியின் மேல் கணக்கிடப்பட்டு மாதாந்தம் வரவுவைக்கப்படும். ஆயின், கணக்கு/கணக்குகள் அத்தகைய ஒவ்வொரு கணக்கிடுதல் நாளன்றும் தேவைப்பட்ட குறைந்தபட்ச மீதியைக் கொண்டிருத்தல் வேண்டும். நடைமுறைக் கணக்குகளில் எஞ்சியுள்ள எவையேனும் வரவு மீதிகளின் மீது வட்டி செலுத்தப்படமாட்டாது.

(xii) ஏதேனும் வைப்புக்கணக்கு/கணக்குகள் மீதான வட்டி, நாளுக்கு நாள் நிலுவையில், அல்லது (அதன் தனித் தற்றுணிபின் படி ) வங்கியினால் வேறு வகையாகத் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகத் திரளுமென்பதுடன் இயைபான வைப்புக் கணக்குக்கு (கணக்குகளுக்கு) அல்லது என்னால் அறிவுறுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் கணக்குக்கு வங்கியினால் வரவுவைக்கவும்படும்.

(xiii) நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக எழுகின்ற மேலதிகப்பற்று மற்றும் வேறு வசதிகள் மீதான வட்டி நாளாந்த மீதி அடிப்படையில் கணக்கிடப்பட்டு மாதாந்தம் அல்லது நிலவுகின்ற முக்கிய விடயங்கள் குறித்த ஆவணத்தில் காணப்படுகின்றவாறு பற்றுவைக்கப்படும்.

(xiv) தொகையொன்று குறிப்பிட்ட கணக்கொன்றுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும் என கணக்கு வைத்திருப்பவர் உடன்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தொகை ஒவ்வொரு மாதமும் முறையான கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(xv) கணக்கு வைத்திருப்பவர் மாதாந்தம் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் கணக்குக்கு வைப்பிலிடுவதன் மேல், வங்கியானது கணக்கின் மீது பெறப்படத்தக்க வட்டியின் மீதான ஒரு மேலதிக வட்டிக் கொடுப்பனவை அடுத்து வரும் மாதத்தின் தொடக்கத்தில் செலுத்துதல் வேண்டும். மாதாந்தம் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட தொகையை வைப்பிலிடுவதற்குத் தவறுவதன் மேல், கணக்கு வைத்திருப்பவர் அம்மாதத்துக்கு பெறப்படத்தக்கதான மேலதிக வட்டிக் கொடுப்பனவை இழப்பித்தல் வேண்டும்.

(xvi) தொடக்க வைப்பு, குறைந்தபட்ச மீதி, வட்டி வீதம் மற்றும் கணக்கிடும் முறை அத்துடன் கணக்குக்கு வட்டியை வரவு வைத்தலுக்கு ஏற்புடையனவான நியதி நிபந்தனைகள் வங்கியின் தற்போதைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும். வங்கியானது, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக கணக்கு வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் வங்கியின் தனித் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் நியதி நிபந்தனைகளையும் மாற்றுவதற்கான / மீளாய்வு செய்வதற்கான / மாற்றியமைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

(xvii) (அ) 'இருவரில் ஒருவர் அல்லது எவரேனும் ஒருவர்' என்ற தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைக் கொண்ட கூட்டு நிலையான வைப்புக்களின் விடயத்தில், காலத்துக்குக் காலம் வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான இயைபான ஆவணங்களுடன் சேர்த்தும் இயைபான காலப்பகுதியின்போது நிலவுகின்ற விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமையவும் முறையான வைப்பு (வைப்புக்கள்) பற்றிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க அத்தகைய கோரிக்கையொன்று பெறப்படுகின்ற விடயத்தில் வங்கியானது வைப்பின் (வைப்புக்களின்) முதிர்வுக்கு முன்னர் வைப்பை (வைப்புக்களை) மீளச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய எல்லா முதிர்வுக்கு முன்னரான மீளப் பெறுகைகளும், வங்கியினால் தீர்மானிக்கப்படும் தண்டங்களினதும் விதிப்பனவுகளினதும் அறவீட்டுக்கு அமைந்தனவாகும் என்பதை கணக்குவைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்.

(xviii) முதிர்வுத் திகதிக்கு முன்னர் ஏழு (07) வேலை நாட்களினுள் முரணான எழுத்திலான அறிவுறுத்தல்கள் பெறப்படாவிடின், அப்போது எல்லா நிலையான வைப்புக்களும், புதுப்பித்தல் நேரத்தில் நிலவுகின்ற வட்டி வீதத்தில் ஒத்த காலத்துக்குத் தானாகவே புதுப்பிக்கப்படும். வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எவ்வாறிருப்பினும், முதிர்வுக்கு முன்னதாயினுஞ்சரி அல்லது அல்லதாயினுஞ்சரி நிலையான வைப்பொன்றை தரமுயர்த்துவதற்காள அறிவுறுத்தல் நிலையான வைப்பின் எல்லாக் கணக்குவைத்திருப்பவர்களினாலும் வழங்கப்படுவது தேவையாதல் வேண்டும் என கணக்குவைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார்.

(xix) கணக்குவைத்திருப்பவரினால் கோரப்படக்கூடிய அத்தகைய கால இடைவெளிகளில் வங்கி கணக்குவைத்திருப்பவருக்கு கணக்குக்கூற்றை (கூற்றுகளை) அனுப்பும் அல்லது ஒப்படைக்கும் என்பதை கணக்குவைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார். எவையேனும் அறிவுறுத்தல்கள் இல்லாத போது வங்கியின் வழமையான வங்கித் தொழில் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க முறையான கணக்குக்காக வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் வங்கிக் கூற்றுகள் அனுப்பப்படுதல் வேண்டும். அதன்மீதுள்ள எல்லாப் பதிவுகளையும் உடனடியாகப் பரீட்சிப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் தனியாகப் பொறுப்பாகவுள்ளார் என்றும் அத்தகைய ஏதேனும் வங்கிக் கூற்றுக்கும் கணக்கு வைத்திருப்பவரின் பதிவேடுகளுக்குமிடையே உள்ளதென கணக்கு வைத்திருப்பவர் நம்புகின்ற ஏதேனும் ஒவ்வாமைபற்றி இயைபான வங்கிக் கூற்றுத் திகதியிலிருந்து பதினான்கு (14)நாட்களினுள் எழுத்திலான அறிவித்தலை கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு வழங்குதல் வேண்டும் என்றும் இத்தால் கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார். என்னிடமிருந்து அத்தகைய ஏதேனும் அறிவித்தல் பெறப்படாவிடின், இயைபான கணக்கு (கணக்குகள்) பற்றிய கூற்றின் சரியான தன்மை பற்றி (எல்லா நோக்கங்களுக்காகவும்) கணக்குவைத்திருப்பவர் உடன்பட்டிருந்து அதனை முடிவான முறையில் சான்றுப்படுத்தியுள்ளார் என அவர் கருதப்படுதல் வேண்டும். மேலேயுள்ளதற்குப் பங்கமின்றியும் இது தொடர்பில் வங்கி மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்தாமலும், அத்தகைய ஏதேனும் கணக்கு (கணக்குகள்) பற்றிய கூற்று தொடர்பில் வங்கி அடுத்துப் பின்னர் ஏதேனும் பிழையைக் கண்டுபிடித்தால், வங்கியினால் அது கண்டுபிடிக்கப்பட்டவுடன் எனது ஏதேனும் கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதன் மூலம் அல்லது வரவு வைப்பதன் மூலம் (தோதானவாறு) அதனை அது நிவர்த்திசெய்யலாமென இத்தால் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

(xx) வங்கியானது பின்வருவோரிடமிருந்து பெறப்படும் எவையேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால், அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்;

(அ) கணக்கு வைத்திருப்பவரைக் குறிப்பீடு செய்யாது, கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவரேனும் வங்கியாளர்கள், கடன் தகவற் பணியகம் அல்லது வேறு எவரேனும் அதிகாரி அல்லது எவரேனும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட திறத்தவர். ஐயத்தைக் தவிர்ப்பதற்காக, அத்தகைய ஏதேனும் பதில் ஒரு வங்கிக் குறிப்பீட்டை உள்ளடக்கலாம்.

(ஆ)கணக்கு வைத்திருப்பவரின் கணக்கு (கணக்குகள்) / வசதிகள் தொடர்பாக வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் சம்பந்தமாக எவரேனும் உள்ளபடியான அல்லது நிகழ்தகு சாட்டுநர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தரீதியிலான திறத்தவர்.

(xxi) பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, குறுஞ்செய்திச் சேவை, தொலைநகல், அஞ்சல், தொலைபேசி முதலியவற்றினூடாக வங்கியின் அல்லது அதன் விளைபொருட்களின் / சேவைகளின் எல்லாச் சந்தைப்படுத்தல் தகவல்களையும் வழங்குவதற்கு கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். கூட்டுக்

கணக்கின் பட்சத்தில், பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல், பிரதான கணக்கு வைத்திருப்பவரினதாதல் வேண்டும் அல்லது அறிவுறுத்தப்பட்டவாறாதல் வேண்டும்.

(xxii) வங்கியானது அதன் தனித் தற்றுணிபின் படி எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு எவையேனும் செயற்பாடுகளைக் குறித்தளிக்கலாம் என்பதுடன் அத்தகைய மூன்றாம் திறத்தவர்களுக்குக் கணக்கின் (கணக்குகளின்) விபரங்களையும் வழங்கலாம். இது சம்பந்தமாக, வங்கியின் துணைக் கம்பெனிகளுள் மற்றும் இணைக் கம்பெனிகளுள் எவற்றுக்கும் அல்லது வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது முகவர் அல்லது மூன்றாம் திறத்தவரிடம் கணக்கு வைத்திருப்பவர், கணக்கு (கணக்குகள்) அத்துடன் / அல்லது கொடுக்கல்வாங்கல் ( வாங்கல்கள் ) பற்றிய தகவலை வங்கி செய்முறைப்படுத்துதல், பகிர்தல் மற்றும் தேக்கிவைத்தல் அல்லது அனுப்புதல் தேவையாகவுள்ளதெனக் கணக்கு வைத்திருப்பவர் (கணக்கு வைத்திருப்பவர்கள்) விளங்கிக் கொண்டு வங்கிக்கு அவ்வாறு அதிகாரமளிக்கிறார் / அதிகாரமளிக்கின்றனர்.

(xxiii) எனது கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்குப் பதினான்கு (14) வேலை நாட்கால எழுத்திலான அறிவித்தலைக் வழங்கிய பின்னர், எவையேனும் காரணங்களைக் குறித்தளிக்காமல் ஏதேனும் கணக்கைத் திறப்பதற்கு அல்லது ஏதேனும் கணக்கை மூடிவிடுவதற்கு மறுப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

(xxiv) எவ்வாறாயினும், வங்கி, ஒன்றில் அதன் சொந்தத் தூண்டுதலின் பேரில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையில் அல்லது நிருவாகக் கட்டளையில், அல்லது வேறுவகையாக, கணக்குவைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றி அல்லது கணக்குவைத்திருப்பவரின் பேரில் வங்கி கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் கடமையின் ஏதேனும் மீறுகைக்காகப் பொறுப்பாகாமல், கணக்கு (கணக்குகள்) எவற்றின் மீதும் கையாளுகைகளை மூடிவிடலாம், முடக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(xxv) தொடர்ச்சியாக இருபத்து நான்கு (24) மாத காலப்பகுதியொன்றிற்கு கணக்கு வைத்திருப்பவரினால் தொடக்கிவைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் எவற்றையும் கொண்டிராத வெளிநாட்டு நாணயக் கணக்குகள் உட்பட ஏதேனும் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கு “செயலற்ற கணக்கு” என வகைப்படுத்தப்படும்.

(xxvi) (வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் காலத்துக்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக) குறைந்தபட்ச மீதி பேணப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவரின் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்கு மூடிவிடுகை பற்றிப் பதினான்கு (14) வேலைநாட்கால எழுத்திலான அறிவித்தலை வழங்கியதன் பின்னர், கணக்கை (கணக்குகளை) அவ்வாறு மூடிவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

(xxvii) எல்லாக் கணக்கும் (கணக்குகளும்), வங்கியின் இணையத்தளத்தில் அவற்றை வெளியிட்டதன் பின்னர் வங்கியின் தற்றுணிபின் பேரில் காலத்துக்குக்காலம் மாற்றத்துக்கு அமைந்த அதன் சொந்தக் குறைந்தபட்ச மீதித் தேவைப்பாட்டைக் கொண்டிருக்கலாம். அத்தகைய குறைந்தபட்ச மீதியை என்னால் தீர்வுசெய்யமுடியாவிடின், வங்கியானது அத்தகைய கணக்கின் (கணக்குகளின்) மீது ஒரு சேவை விதிப்பனவை அத்துடன் / அல்லது வேறு எவையேனும் ஏற்புடையனவான விதிப்பனவுகளை அறவிடலாம். நிலவுகின்ற விதிப்பனவுகள் கட்டணம் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(xxix) எவையேனும் கணக்குகள் தொடர்பிலான எவையேனும் கையாளுகைகள் தொடர்பாக, கணக்கு வைத்திருப்பவரின இறப்பு, இயலாமை அல்லது வங்கிமுறிவிலிருந்து (அல்லது வேறேதேனும் ஒத்த நிகழ்வு அல்லது நடவடிக்கையிலிருந்து) விளைகின்ற ஏதேனும் இழப்புக்காக , வங்கிக்குத் தேவையாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய ஆவணச் சான்றுடன் சேர்த்து அத்தகைய ஏதேனும் நிகழ்வுபற்றிய எழுத்திலான அறிவித்தலை வங்கி பெற்றாலொழியவும் பெறும்வரையும், வங்கி

பொறுப்பாதலாகாது. மேலும், வங்கியானது, ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க முகவராண்மையின் அல்லது அதிகாரியின் நடவடிக்கைக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்றிக்கூறப்படற்பாலதான ஏதேனும் இழப்புக்காக, சேதத்துக்காக அல்லது தாமதத்துக்காக, அல்லது வங்கி ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கிணங்க ஏதேனும் செயலை அல்லது செய்யாமையைப் புரிந்துள்ள பட்சத்தில், அல்லது வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வேறேதேனும் நிகழ்வு ஏற்பட்டுள்ள பட்சத்தில் ( வரையறையின்றி வேலைநிறுத்தங்கள், கைத்தொழில் நடவடிக்கை, சாதனத்தின் தவறுகை அல்லது மின்வழங்கலின் தடை என்பனவுட்பட) கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாதலாகாது. வங்கியானது அதன் கிளைகளிலான அறிவித்தல் மூலம் அல்லது வேறுவகையாக, சொல்லப்பட்ட நிகழ்வுகளுள் எவைகாரணமாகவும் ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட தாமதங்கள் பற்றி அதன் வாடிக்கையாளர்களுக்குப் பொதுவாக அறிவித்தல் வழங்க முயற்சிக்கலாம்.

(xxx) பராயமடையாத ஒருவருக்கு கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் கணக்கொன்றைத் திறக்கும் பட்சத்தில், இந்நியதி நிபந்தனைகளுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய கணக்கிற்கு ஏற்புடையனவான நியதி நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதற்கு கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

(xxxi) கணக்கு வைத்திருப்பவர் இறப்பதன் மேல் அல்லது கூட்டுக்கணக்குகள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவர்களுள் எவரும் இறப்பதன் மீது உயிரோடிருப்பவருக்கு (உயிரோடிருப்பவர்களுக்கு) வருமதியான அத்துடன் / அல்லது அவர்களின் ஏதேனும் வரவுமீதி, ஏதேனும் சோந்தை, பொறுப்பு, அடைமானம், எதிரீடு, எதிர் உரிமைக்கோரிக்கை அல்லது எத்தகையதுமான வேறெவ்வகையிலும் எழுகின்ற அத்தகைய மீதி, பிணையங்கள் முதலியன தொடர்பில் அல்லது எவரேனும் ஆளினாலான ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் நோக்கில் எடுப்பதற்கு விரும்பத்தக்கதென வங்கி கருதக்கூடிய ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் வங்கி கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உரிமையை வங்கி பிரயோகிக்கின்றமைக்கு அமைய மட்டுமே வங்கியினால் விடுவிக்கப்படுதல் வேண்டுமென கணக்கு வைத்திருப்பவர் இத்தால் ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கின்றார்.

(xxxii) வங்கியானது எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் இயைபான அதிகாரிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

(xxxiii) வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்கான முன்னறிவித்தலுடன் குறைந்தபட்ச சராசரி வரவு மீதியை வேறுபடுத்துவதற்கு, திரிபுபடுத்துவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும் என கணக்கு வைத்திருப்பவர் இத்தால் உடன்படுகின்றார்.

## NDB சேமிப்புத் திட்டம்

(xxxiv) கணக்கு வைத்திருப்பவர் தனியாக அல்லது கூட்டாக சேமிப்புத் திட்டக் கணக்கொன்றை திறக்கலாம்.

(xxxv) ஒவ்வொரு NDB சேமிப்புத்திட்டக் கணக்கும், ஒன்றில் முதலாவது மாதாந்த தவணைக் கொடுப்பனவு அல்லது ஒட்டுமொத்தத் தொகை வைப்பொன்றுடன் சேர்ந்து முதலாவது மாதாந்த தவணைக் கொடுப்பனவைக் கொண்ட ஆரம்ப வைப்பொன்றின் மீது திறக்கப்பட்டு NDB சேமிப்புத் திட்டச் சான்றிதழொன்று வழங்கப்படும். அத்தகைய சான்றிதழ் கணக்கு வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அதன் பாதுகாப்பு கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் முதிர்வின் போது அச்சான்றிதழை ஒப்படைப்பது கட்டாயமாதலும் வேண்டும். NDB சேமிப்புத் திட்டச் சான்றிதழ் காணாமல் போனால், திருடப்பட்டால் அல்லது இடந்தவறி வைக்கப்பட்டால் கணக்கு வைத்திருப்பவர் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் வங்கியானது, ஒரு

செல்லுபடியான சத்தியக்கடதாசி பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படத்தக்க விளக்கமொன்றின் மீது ஒரு புதிய இணைப்பிரதிச் சான்றிதழொன்றையும் வழங்கலாம்.

(xxxvi) முதிர்வின் போது, NDB சேமிப்புத்திட்டச் சான்றிதழை சமர்ப்பிப்பதன் மேல், கணக்குக்கு வரவுக்கு இருக்கும் பணங்கள் கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் படி கையாளப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவருக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள செலுத்துகை விருப்பத் தெரிவுகள் பின்வருவனவற்றுக்காகவிருத்தல் வேண்டும்,

(i) பணம் செலுத்தவதற்கும்

(ii) கணக்கு வைத்திருப்பவரின் NDB கணக்குக்கு நிதிகளைப் பரிமாற்றுவதற்கும்

(iii) பணஞ் செலுத்தற் கட்டளையை வழங்குவதற்கும் அல்லது SLIPS ஊடாக நிதிகளைப் பரிமாற்றுவதற்கும்

(xxxvii)கணக்கு வைத்திருப்பவர் முதிர்வின் போது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட சேமிப்புப் பெறுமதியை உரிமைகோராத பட்சத்தில், வங்கியானது முதிர்வின் மூலமான வரும்படிகளை கணக்கு வைத்திருப்பவரின் ஒரு கிடைக்கக்கூடியதாகவுள்ள ஏற்கனவேயுள்ள NDB கணக்குக்கு பரிமாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

(xxxviii) வங்கியின் வேறு எவையேனும் நியதிநிபந்தனைகளில் அடங்கியுள்ளவைக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், NDB சேமிப்புத் திட்டக் கணக்குக்கான கணக்கின் வங்கிக்கூற்று, கணக்கு வைத்திருப்பவரினால் வங்கிக்கு கடைசியாக உறுதிப்படுத்தப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு காலாண்டுக்கு ஒரு முறை கணக்கு வைத்திருப்பவருக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும்.

(xxxix) கணக்கு வைத்திருப்பவர், மாதாந்த வங்கிக்கூற்றுக்களைப் பெறுவதற்கு தெரிவுசெய்துள்ள பட்சத்தில், அது கணக்கு வைத்திருப்பவருக்கு மாதாந்தம் மின்னஞ்சலில் அனுப்பப்படும்.

(xl) மாதாந்த தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதி தொடக்க வைப்புத் திகதிக்குப் பின்னர் ஒரு (01) மாதமாகவிருக்கும்.

(xli) மாதாந்த தவணைக் கொடுப்பனவு தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதியில் செலுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்துவது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாதல் வேண்டும். தவணைக் கொடுப்பனவுகள் தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதியில் பெறப்படாவிடின் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட சேமிப்புப் பெறுமதிக்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்துடையவராதலாகாது.

(xlii) காசோலைகள், வரைவுகள் இக் கணக்கின் வரவுக்குப் பெற்றுக்கொள்ளப்படுதலாகாது.

(xliii) கணக்கு வைத்திருப்பவரின் இறப்பு, பங்களிப்புக் காலப்பகுதியின் போது இடம்பெறின், சேமிப்புத் திட்டக் கணக்கு முடிவுறுத்தப்படும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இறக்கின்ற நேரம் வரை வைப்பிலிடப்பட்ட உதவுதொகைகள், அவற்றின் மீதான எவையேனும் நியதிச்சட்ட வரிகள் மற்றும் அறவீடுகளுக்கு எவ்வாறாயினும் அமையவும் இதற்கான ‘‘ச (iii)’’ என்னும் பிரிவுக்கு அமையவும் எவையேனும் தண்ட விதிப்பனவுகள் இன்றி திரண்ட வட்டியுடன் சேர்த்து நியமத்தருக்குச் செலுத்தப்படும்.

(xliv)அத்தகைய பெயர்நியமனம் இல்லாதபோது அத்தகைய வைப்பின் வழங்குகை இலங்கையின் நிலவுகின்ற சட்டங்களுக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும்.

(xlv) கணக்குவைத்திருப்பவர் நிலவுகின்ற பிடித்துவைத்தல் வரி (WHT) சட்டங்களுக்கு அமைந்தவராக இல்லாத பட்சத்தில், அத்தகைய கணக்குவைத்திருப்பவர் முதிர்வுக் காலப்பகுதியின் போது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட இலக்குத் தொகைக்கு தகைமையுடையவராவார். கணக்குவைத்திருப்பவர் நிலவுகின்ற WHT கழிவுகளுக்கு அமைந்தவராகவிருப்பின், மாதாந்த தவணைக்கொடுப்பனவுகள் WHT கழிவுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் என்பதுடன் முதிர்வின்போதான இறுதி

இலக்குத் தொகை அத்தகைய கழிவுகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(xlvi) மீளப்பெறுகைகள் எவையும் முதிர்வுத் திகதி வரை NDB சேமிப்புத் திட்டக் கணக்கிலிருந்து அனுமதிக்கப்படுதலாகாது. கணக்கு வைத்திருப்பவரினால் கோரிக்கையொன்று செய்யப்படுவதன் மேல், வங்கியானது அதன் தனித் தற்றுணிபில், தண்ட வீதமொன்றுக்கு அமைய முதிர்வுக்கு முன்னரான மீளப்பெறுகையொன்றுக்கு அனுமதிக்கலாம்.

(xlvii) கணக்கு வைத்திருப்பவர் மாதாந்த தவணைக்கொடுப்பனவைச் செலுத்தாத பட்சத்தில் அத்துடன் / அல்லது கொடுப்பனவை நிறுத்துகின்ற பட்சத்தில், சேமிப்புத் திட்டக் கணக்குக்கு ஏற்புடையதான வட்டிவீதம் வங்கியின் தனித்தற்றுணிபில் தீர்மானிக்கப்படும்.

(xlviii)வங்கியானது உடன்பட்டுக் கொள்ளப்பட்ட சேமிப்புப் பெறுமதியின் கொடுப்பனவுக்கு உத்தரவாதமளிக்கின்றது. ஆயின், எல்லா மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளும் மேலதிக கொடுப்பனவுகளுடன் (எவையேனும் இருப்பின்) சேர்த்தும் வங்கியினால் கணக்கு வைத்தருப்பவருக்கு கொடுப்பனவு செய்யும் நேரத்தில் நிலவுகின்ற எவையேனும் நியதிச்சட்ட வரிகள் மற்றும் அறவீடுகளுக்கு அமையவும் தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதிகளில் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xlix) கணக்கு வைத்திருப்பவர், ஒட்டுமொத்த வைப்பு அல்லது மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகைக்கு மேலாக மேலதிக கொடுப்பனவுகளை கணக்குக்குச் செய்திருப்பின் முதிர்வின் போது வட்டிவீதத்தை தீர்மானிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**கூட்டுக் கணக்குகள்**

(l) கூட்டுக் கணக்கொன்றின் விடயத்தில், சான்றிதழானது முதன்மைக் கணக்கு வைத்திருப்பவரினதும் 01 ஆம் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரினதும் பெயர்களை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும்.

(li) கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள், அத்தகைய கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களுள் ஒருவரின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பற்று வைக்கப்படும் கணக்கொன்றை பெயர்குறித்தல் வேண்டும்.

(lii ) கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் இறக்கின்ற பட்சத்தில், பின்வாழுபவர் உரிமை விதி மேலோங்குதல் வேண்டும் என்பதுடன் உயிர்வாழும் கணக்கு வைத்திருப்பவர் / வைத்திருப்பவர்கள், மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள் தவணைக்கொடுப்பனவுக்குரிய திகதியில் செலுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(liii) முதிர்வின் மேல், கணக்கு வைத்திருப்பவர் / வைத்திருப்பவர்கள் கணக்கை மூடிவிடுவதற்கு வங்கிக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

(liv) நாளின் இறுதியில் கணக்குக்கு வட்டி வரவு வைக்கப்படுவதால், கணக்கு வைத்திருப்பவர் முதிர்வுத் திகதியின் பின்னர் அடுத்த நாளன்று முதிர்வுப் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(lv)எம்முள் எவரேனுமொருவருக்கு அல்லது எம்முள் எல்லோருக்கும் செலுத்தப்படத்தக்கதான அல்லது சொந்தமானவையாகக் கொள்ளப்படுகின்றனவான பணக் கொடுப்பனவுக்கான எவையேனும் மற்றும் எல்லாக் காசோலைகளையும், பத்திரங்களையும் அல்லது வேறு சாதனங்களையும் வைப்பிலிடுவதற்காகப் புறக்குறிப்பிடுவதற்கும் வங்கியில் வைப்பிலிடுவதற்கும் ஒவ்வொரு கணக்கு வைத்திருப்பவரும் மற்றொவ்வொருவருக்கும் இத்தால் அதிகாரமளித்து தத்துவமளிக்கின்றார் என்பதுடன் ஆதலால் அத்தகைய எவையேனும் சாதனங்கள் புறக்குறிப்பிடப்படாமல் வங்கியினால் பெறப்படின் அத்தகைய ஏதேனும் சாதனத்தை எமதுசார்பில் புறக்குறிப்பிடுவதற்கும் கணக்குக்கு (கணக்குகளுக்கு) அவற்றை வரவுவைப்பதற்கும் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது; அத்துடன் அத்தகைய கணக்கின் (கணக்குகளின்) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்,

அத்தகைய சாதனங்களைக் கையொப்பமிடுவதற்குக் கணக்குவைத்திருப்பவராக அமைகின்ற தனியாட்களுள் எவரேனுமொருவருக்காக எப்போதும் இருத்தல் வேண்டும்.

(lvi) கூட்டுக் கணக்குவைத்திருப்பவர்களுள் எவரும் இறக்கும் பட்சத்தில், சொல்லப்பட்ட கூட்டுக்கணக்கின் (கணக்குகளின்) வரவுக்கிருக்கும் பணங்கள், உயிரோடிருக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு (கணக்கு வைத்திருப்போருக்கு) செலுத்தீடு செய்யப்படும் என்பதுடன் வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையான சான்றுடன் இறப்புப்பற்றிய உரிய அறிவித்தல் வங்கிக்குக் வழங்கப்படும் காலம்வரை, கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) எவரும், தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின்படி பணங்களைச் செலுத்துவதற்காக வங்கியைப் பொறுப்பாக்கவும்மாட்டார் / மாட்டார்கள்.

(lvii) கணக்குவைத்திருப்பவர் ஒருவரின் அல்லது எவரேனும் ஒருவரின் இறப்புப்பற்றிய அறிவித்தலை வங்கி பெறுவதன்மேல், எத்தகையதுமான கணக்குக்காக (கணக்குகளுக்காக) ஏதேனும் கணக்கின் வரவிலிருக்கும் அல்லது ஏதேனும் வங்கியினால் வைத்திருக்கப்பட்ட எத்தகையனவுமான எல்லாப் பணங்களும், பிணையங்களும், உறுதிகளும், ஆவணங்களும் மற்றும் வேறு ஆதனங்களும், கணக்குவைத்திருப்பவரின் உயிரோடிருப்பவருக்கு அல்லது உயிரோடிருப்போருக்கு அல்லது அவரின் கட்டளைக்கு அது கொடுப்பனவு செய்யப்படுவதன்மேல் அல்லது ஒப்படைக்கப்படுவதன்மேல் வங்கியானது கணக்குவைத்திருப்பவருக்கான அதன் கடப்பாடுகளிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுதல் வேண்டும் என ஒவ்வொரு கணக்கு வைத்திருப்பவரும் உடன்படுகின்றார்.

(Lviii) கணக்கின் (கணக்குகளின்) மீது அல்லது வேறுவகையாக ஏற்கநேர்ந்த மேலதிகப்பற்று அல்லது வேறு கடப்பாடுகள் ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரினதும் கூட்டான மற்றும் தனித்தனியான பொறுப்பாதல் வேண்டும். ஒரு கூட்டுக் கணக்கின் பட்சத்தில், பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல், பிரதான கணக்கு வைத்திருப்பவரினதாக அல்லது அறிவுறுத்தப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

**3. தொலைபேசி,தொலைநகல் அத்துடன் / அல்லது மின்னஞ்சல் மூலமான வங்கித் தொழில் அறிவுறுத்தல்கள்**

(i) முரணாக எழுத்தில் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு அறிவுறுத்தினாலொழிய (4ஆம் வாசகத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்), ஒரு தொலைநகல் பொறியினூடாக அல்லது பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பப்பட்ட எனது வங்கித் தொழில் அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுவதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது, ஆனால் கடப்பாடுடையதல்ல (இந்நியதி நிபந்தனைகள் முரணாக வெளிப்படையாக வேறு வகையில் கூறினாலொழிய, அவை தொடர்பாக என்னிடமிருந்து தேவைப்பட்ட அல்லது என்னால் வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்கள் உட்பட). அத்தகைய மின்னஞ்சல்கள், கணக்கு வைத்திருப்பவரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க கணக்கு வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களின் ஸ்கான் செய்யப்பட்ட, கையொப்பமிடப்பட்ட பிரதியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இந் நோக்கத்துக்காகப் பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, வங்கிக்கு வழங்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் / வைத்திருப்பவர்களின் மின்னஞ்சல் முகவரியாகவிருத்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவரினால் / வைத்திருப்பவர்களினால் நியமிக்கப்பட்ட அற்றோணிகளுக்கு இது ஏற்புடையதாதலாகாது.

(ii) வங்கியானது, கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு முரணாக எழுத்தில் அறிவுறுத்தினாலொழிய, பின்வருவன தொடர்பில் கணக்குவைத்திருப்பவரின் தொலைபேசி மூலமான அறிவுறுத்தல்கள் மீது செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது ஆனால் அவ்வாறு செய்வதற்கு கடப்பாடுடையது அல்ல;

அ. கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் எவற்றுக்குமிடையில் நிதிகளை பரிமாற்றுதல் (எவ்வாறாயினும், கூட்டுக் கணக்குகளின் விடயத்தில், கையொப்பமிடும் அறிவுறுத்தல்கள் ''இரு திறத்தவர்களில் ஒரு திறத்தவர் கையொப்பமிடுதல் வேண்டும்'' என்றவாறு இருக்கும்போது மட்டும் பரிமாற்றங்கள் அனுமதிக்கப்படும்). அத்தகைய சந்தர்ப்பங்களில், பரிமாற்றமானது கணக்கு வைத்திருப்பவரின் கூட்டுக் கணக்கு / கணக்குகளுக்கிடையில் அத்துடன் / அல்லது தனிப்பட்ட கணக்கு / கணக்குகளுக்கிடையில் இருத்தல் வேண்டும்.

ஆ. கணக்கு வைத்திருப்பவரின் கணக்கு / கணக்குகள் தொடர்பில் வங்கிக்கூற்றுக்கள், காசோலைப் புத்தகங்கள் மற்றும் காசோலைக் கொடுப்பனவுகளின் நிறுத்தத்துக்கான கோரிக்கை.

(iii) பின்வருவனவற்றின் விளைவாக எவ்வாறாயினும் எழுகின்ற அல்லது பின்வருவனவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்ட வழக்குகள், துடர்ச்சிகள், வழக்கு நடவடிக்கைகள், செலவு தொகைகள், உரிமைக்கோரிக்கைகள், கோரிக்கைகள், விதிப்பனவுகள், செலவுகள், இழப்புக்கள் மற்றும் பொறுப்புகள் எல்லாவற்றிலிருந்தும் அவற்றுக்கெதிராகவும் கணக்குவைத்திருப்பவர் வங்கியை விடுவித்து வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் அதற்குத் தீங்கு விளையாதவாறு வைத்திருத்தலும் வேண்டும்:

(அ) தொலைநகல், பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியினூடாக கணக்குவைத்திருப்பவரினால் அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது தொலைபேசியிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பிழையாகத் தொடங்கப்பட்டுள்ளமை அல்லது கடத்தப்பட்டுள்ளமை அல்லது தொடர்பாடல் அல்லது கடத்தல் வழிகளில் மோசடியானமுறையில் மாற்றப்பட்டமை, பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்டமை அல்லது திரிபுபடுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும், மேலேயுள்ளவாறான அத்தகைய அறிவுறுத்தலுக்கு (அறிவுறுத்தல்களுக்கு) இணங்க வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றியுள்ளமை, அத்துடன்

(ஆ) அனுப்புகின்ற அல்லது பெறுகின்ற பொறியின் பழுது, தவறுகையுடன் சம்பந்தப்பட்டதாயினுஞ்சரி, வங்கிக்கு அதன் உள்ளபடியான அனுப்புகை தவறியமை காரணமாக அல்லது எத்தகையதுமான காரணத்துக்காகவும் வங்கியினால் பெறுகை தவறியமை காரணமாக கணக்குவைத்திருப்பவரின் எழுத்திலான, தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தலுக்கு (அறிவுறுத்தல்களுக்கு) இணங்க வங்கி செயலாற்றாது தவிர்ந்துள்ளமை, அல்லது

(இ) வங்கி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் தொலைநகல் அறிவுறுத்தலின் (அறிவுறுத்தல்களின்) எல்லா மூலப் பிரதிகளையும் அல்லது தொலைபேசி மூலமான அறிவுறுத்தலின் (அறிவுறுத்தல்களின்) எழுத்திலான சரிபார்த்தல்களையும் அனுப்பிவைப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் தவறியமை.

(iv) அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நேரத்தில் அறிவுறுத்தல்களை வழங்குகின்ற அல்லது வழங்குகின்றவராகக் கொள்ளப்படுகின்ற ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் பற்றி விசாரணை செய்வதற்கும் (நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாது) அல்லது தொலைபேசி மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல்மூலம் வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களின் அல்லது கட்டளைகளின் மெய்யான தன்மையை அல்லது வேறுவகையான தன்மையைச் சரிபார்ப்பதற்கும் வங்கி எத்தகையதுமான எப்பொறுப்பின் கீழும் இருத்தலாகாது. தொலைநகல் மற்றும் மின்னஞ்சல்கள் அல்லது தொலைபேசி மூலமான அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நேரமும் திகதியும் மீதான வங்கியின் விதிப்பை கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்.

(v) வங்கியில் பதியப்பட்ட கணக்குவைத்திருப்பவரின் மாதிரிக் கையொப்பத்துடன் அல்லது கணக்குவைத்திருப்பவரின் அற்றோணியின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களின் மாதிரிக்

கையொப்பத்துடன் இணங்கியொழுகுவதாக வங்கிக்குத் தோன்றுகின்ற கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பத்தைக் கொண்டுள்ள ஏதேனும் தொகைநகல் அறிவுறுத்தல் அல்லது கட்டளை, கணக்கு வைத்திருப்பவரின் அறிவுறுத்தலாக அல்லது கட்டளையாக இருப்பதாக வங்கியின் நன்மைக்காக முடிவான முறையில் ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(vi) கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படாதனவும் அல்லது அதிகாரமளிக்கப்படாதனவும் ஆனால் கணக்கு வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் என வங்கி நல்லெண்ணத்துடன் நம்பிய தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் மீது வங்கி செயலாற்றினால் கணக்கு வைத்திருப்பவர் அடையக்கூடிய ஏதேனும் இழப்புக்கு வங்கி பொறுப்பாதலாகாது. ஆயின், வங்கி அதன் தனித் தற்றுணியில் கணக்கு வைத்திருப்பவரின் எவையேனும் தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் மீது செயலாற்றுவதற்கு மறுக்கலாம்.

(vii) தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்களை அல்லது கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்கு வங்கிக்குள்ள அதிகாரம் ஒரு தொடர்ச்சியான அதிகாரமாகவுள்ளதுடன் அத்தகைய அதிகாரத்தை முடிவுறுத்துகின்ற கணக்கு வைத்திருப்பவரின் எழுத்திலான அறிவித்தல் வங்கியினால் பெறப்படும்வரை வலுவில் இருத்தலும் வேண்டும்.

(viii) தொலைபேசி, தொலைநகல் மூலமான அனுப்புகைகள் அல்லது மின்னஞ்சல்கள், அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை வழங்குவதற்கு பாதுகாப்பான வழிகள் அல்லவென்பதை கணக்குவைத்திருப்பவர் ஒப்புக்கொள்கின்றார் என்பதுடன் சம்பந்தப்பட்டுள்ள அபாயங்களையும் அத்தகைய தொலைபேசி, தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளை/கட்டளைகளை ஏற்று அவற்றின் மீது செலாற்றுவதற்கான வங்கிக்கான கணக்குவைத்திருப்பவரின் கோரிக்கை கணக்குவைத்திருப்பவரின் வசதிக்கானதென்பதையும் கணக்கு வைத்திருப்பவரின் அபாயத்தில் மட்டுமே என்பதையும் கணக்குவைத்திருப்பவர் அறிந்துள்ளார்.

(ix) வங்கியினாலான அல்லது வங்கிக்கான தொலைபேசி அழைப்புக்கள், அக்கறைகளையும் வங்கியின் அக்கறைகளையும் பாதுகாப்பதற்காக பதிவுசெய்யப்படலாம் என கணக்குவைத்திருப்பவர் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கின்றார்.

(x) தொலைபேசி அறிவுறுத்தல் (அறிவுறுத்தல்கள்) தொடர்பில் வங்கியின் நடவடிக்கை முழுமையாக கணக்கு வைத்திருப்பவரின் நன்மைக்காகவும் அவரின் சொந்த அபாயத்திலும் பொறுப்பிலும் இருக்குமென கணக்கு வைத்திருப்பவர் இத்தால் உடன்பட்டு வெளிப்படுத்துகின்றார். வங்கி அத்துடன் / அல்லது அதன் ஊழியர்கள், தொலைபேசிமூலம் வங்கிக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலை (அறிவுறுத்தல்களை) நிறைவேற்றுதல் சம்பந்தமாக, தொலைபேசிமூலம் அத்தகைய அறிவுறுத்தலை வழங்கும் ஆள் அல்லது அவரது குரல் வங்கியினால் அத்துடன் / அல்லது அதன் ஊழியர்களினால் அடையாளம் காணப்படமுடியவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், ஒப்பந்தத்தில் அல்லது தீங்கியலில் அல்லது வேறுவகையாக எழுகின்றதாயினுஞ்சரி, எவ்வாறானதுமான ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்குப் பொறுப்பாக்கப்படுதலாகாது.

**4. தொலைபேசி / மின்னஞ்சல் / தொலைநகல் ஊடாக மீதிகளை / கணக்கு பற்றிய தகவலை வழங்குவதற்கான நட்டோத்தரவாதம்.**

(i) கணக்குவைத்திருப்பவரின் கணக்கு (கணக்குகள்) தொடர்பான மீதிகள் அத்துடன் / அல்லது வேறு தகவல் பற்றித் தொலைபேசி மூலம் அல்லது மின்னஞ்சலினூடாக (ஸ்கான் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட அறிவுறுத்தல்கள்) அல்லது தொலைநகலினூடாக அல்லது ஏதேனும் வேறு வழியில் வங்கித்தொழில் நேரங்களின்போது வங்கியிடமிருந்து

அல்லது வங்கியில் விசாரிக்கப்படும்போதெல்லாம் அதனை கணக்குவைத்திருப்பவருக்கு அல்லது கணக்குவைத்திருப்பவரின் பிரதிநிதிகளுக்குக் கொடுத்துதவும்படி வங்கியிடம் கணக்குவைத்திருப்பவர் கோருகின்றார். தொலைபேசி மூலம், மின்னஞ்சல் அல்லது தொலைநகலினூடாகத் தகவலைப் பெறுவதில் சம்பந்தப்பட்டுள்ள அபாயங்களை கணக்குவைத்திருப்பவர் அறிந்துள்ளார் என்பதுடன் வங்கியானது அதன் தனித்தற்றுணியில் அத்தகைய தகவலை வங்கி கணக்குவைத்திருப்பவருக்கு அல்லது கணக்குவைத்திருப்பவரின் பிரதிநிதிகளுக்குக் கொடுத்துதவும் என்பதையும் விளங்கிக்கொள்கின்றார்.

(ii) மேலேயுள்ளது தொடர்பில் வங்கியின் நடவடிக்கை முழுமையாக கணக்குவைத்திருப்பவரின் நன்மைக்காகவும் அவரது சொந்த அபாயத்திலும் பொறுப்பிலும் இருக்குமென கணக்குவைத்திருப்பவர் இத்தால் உடன்பட்டு வெளிப்படுத்துகின்றார். வங்கி அத்துடன் / அல்லது அதன் ஊழியர்கள், தொலைபேசிமூலம், தொலைநகல் அல்லது மின்னஞ்சலினூடாக கணக்குவைத்திருப்பவருக்கு மற்றும் அவரது பிரதிநிதிகளுக்கு மீதிகள் / கணக்குத்தகவலை அறிவித்தல் சம்பந்தமாக, சொல்லப்பட்ட அறிவுறுத்தல் கணக்குவைத்திருப்பவரினால் வழங்கப்படவில்லை அல்லது அதிகாரமளிக்கப்படவில்லை ஆனால் கணக்குவைத்திருப்பவரின் அறிவுறுத்தல் (அறிவுறுத்தல்கள்) அல்லது கட்டளை (கட்டளைகள்) என அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டனவென வங்கி நல்லெண்ணத்துடன் நம்பியதென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், ஒப்பந்தத்தில் அல்லது தீங்கியலில் அல்லது வேறுவகையாக எழுகின்றதாயினுஞ்சரி, எவ்வாறானதுமான ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்குப் பொறுப்பாக்கப்படுதலாகாது.

(iii) தொலைபேசியினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சேவையைப் பயன்படுத்துவதனை நிறுத்துவதற்கு கணக்குவைத்திருப்பவர் தீர்மானிக்கின்ற விடயத்தில், கணக்குவைத்திருப்பவர் அதுபற்றி எழுத்தில் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(iv) மேற்கூறப்பட்டவாறான வசதியை / சேவையைப் பின்பற்றி வழங்கப்பட்ட / வழங்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அறிவுறுத்தலை (அறிவுறுத்தல்களை) வங்கி மதிக்கின்றமைக்கு அல்லது நிறைவேற்றுகின்றமைக்குப் பிரதிபயனாக மேற்கூறப்பட்டவாறான வசதியை / சேவையைப் பின்பற்றி வழங்கப்பட்ட / வழங்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அறிவுறுத்தலை (அறிவுறுத்தல்களை) வங்கி மதிக்கின்றதன் அல்லது நிறைவேற்றுகின்றதன் காரணமாக எல்லா அறிவித்தல்கள், கோரிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், வழக்குகள், அல்லது வழக்கு நடவடிக்கைகள் எவையேனுமிருப்பின் அவற்றிலிருந்து மற்றும் விடயத்துக்கேற்ப, வங்கியின்மீது / வங்கிக்கெதிராகச் செய்யப்பட்ட அல்லது வங்கியினால் அடையப்பட்ட / ஏற்கநேர்ந்த எல்லாச் சேதங்கள், இழப்புக்கள், செலவு தொகைகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எவையேனுமிருப்பின் அவற்றிலிருந்து கணக்குவைத்திருப்பவர் வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாகவும் பாதுகாக்கப்பட்டதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

**5. அஞ்சல் வைத்திருக்கைச் சேவை**

(i) இச்சேவைக்காகக் கணக்கு வைத்திருப்பவரின் கோரிக்கையின் மேல், வங்கி அதன் தற்றுணிபில் கணக்கு வைத்திருப்பவருக்கு முகவரியிடப்பட்ட எல்லா அஞ்சல்களையும் வைத்திருக்கும் என்பதுடன் அத்தகைய அஞ்சல் கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும். அவ்வாறு வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அஞ்சலை, கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு முரணாக எழுத்தில் அறிவித்தாலொழிய, நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் மூலமாக கணக்கு வைத்திருப்பவர் பெற்றுக்கொள்வார். இச்சேவைக்காகவும் வங்கி தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய எல்லா அஞ்சல்களையும் வைத்திருப்பதற்கும், திறப்பதற்கும் அத்துடன் / அல்லது

கையாள்வதற்கும் நியாயமானவொரு கட்டணத்தை விதிப்பனவு செய்வதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது. அத்தகைய ஏதேனும் அஞ்சலைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்கு வைத்திருப்பவர் தவறினால், வங்கியானது, கணக்கு வைத்திருப்பவரின் அபாயத்திலும் செலவிலும் வங்கியிடம் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்கு அதனை கணக்கு வைத்திருப்பவருக்கு திருப்பி அனுப்பலாமென்பதுடன் அவ்வாறு செய்வதில், வங்கி எல்லாப் பொறுப்புடைமையிலிருந்தும் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் அஞ்சலை கணக்கு வைத்திருப்பவர் பெற்றுக்கொள்ளும்வரை அத்தகைய அஞ்சலின் உள்ளீடுகள் பற்றி கணக்கு வைத்திருப்பவர் அறியாமலிருக்கலாம் மற்றும் இது சட்டவிளைவுகளைக் கொண்டிருக்கலாம் அல்லது வங்கியிடம் கணக்குவைத்திருப்பவரின் உரிமைகளைப் பாதிக்கலாம் என்பது எவ்வாறிருப்பினும், கணக்கு வைத்திருப்பவர் அத்தகைய எவையேனும் விளைவுகளின் அபாயங்களைப் பொறுத்தல் வேண்டும்.

(iii) வங்கியினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் அஞ்சலின் உள்ளீடுகள் பற்றி கணக்கு வைத்திருப்பவர் அறியாமல் இருப்பது, வங்கியில் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கை (கணக்குகளை) முடிவுறுத்துவதற்கு முன்னர் அல்லது பின்னர் எல்லா நோக்கங்களுக்காகவும் எல்லா சட்ட நீதிமன்றங்களிலும் வங்கியின் உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிரான ஒரு எதிர்வாதமாக இருப்பதில்லை அல்லது இருக்காது.

## 6. நிதி ஆலோசனைச் சேவை

(i) வங்கியானது பின்வருவனவற்றுக்கு பொறுப்பாதலாகாது என கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்:

(அ)முதலீடுகளின் பெறுமதியிலான ஏதேனும் வீழ்ச்சி அல்லது அதிகரிப்பு.

(ஆ) வழங்கப்பட்ட தகவல்களின் மற்றும் விடயங்களின் செம்மை, போதியதானதன்மை அல்லது பூரணமான தன்மை.

(இ) எவையேனும் இழந்த இலாபங்கள், இழந்த வாய்ப்புக்கள் அல்லது நிதி ஆலோசனைச் சேவைகளின் ஏதேனும் பயன்பாட்டிலிருந்து எழுகின்ற எவைனேும் மறைமுகமான, விளைவாந்தன்மையினவான, இடைநேர்விளைவான, விசேட, தண்டனை அல்லது தண்டிக்கும் சேதங்கள் நிகழும் சாத்தியப்பாடு உள்ளமை பற்றி வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் அத்துடன் ஒப்பந்தம், நம்புறுதி, தீங்கியல், (அசட்டை உட்பட), கடும் பொறுப்பு என்றதாக அல்லது வேறு வகையாக, வழக்கின் அமைப்பைப் பொருட்படுத்தாமல் அத்தகைய சேதங்கள்.

## 7. எதிரீடும் ஒன்றுதிரட்டல் உரிமைகளும்

வங்கியானது, எந்நேரத்திலும், காலத்துக்குக் காலமும், அறிவித்தலின்றி, வங்கியிடம் உள்ள கணக்குவைத்திருப்பவரின் கணக்கு (கணக்குகள்) எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் பொறுப்புகளையும் கூட்டாக அல்லது தனித்தனியாக வேறெவரேனும் ஆளுடனோ இணைக்கலாம் அல்லது முதல்வராக அல்லது பிணைநிற்பவராக, உள்ளபடியாக அல்லது எதிர்பாராததாக, பிரதானமாக அல்லது இணையுருவாக, தனியாக அல்லது வேறெவரேனுமாளுடன் கூட்டாக, வங்கிக்கான கணக்குவைத்திருப்பவரின் பொறுப்புகளுள் எவற்றையும் கொடுத்துத்தீர்க்குமுகமாக (முதிர்வடைந்திருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) வங்கியிடம் கணக்குவைத்திருப்பவரின் வைப்புகளுட்பட, ஏதேனும் கணக்கின் (கணக்குகளின்) வரவிற்கிருக்கும் எல்லாப் பணங்களையும் அல்லது எவையேனும் பணங்களை எதிரீடு செய்யலாமென்பதுடன் வங்கியானது, அப்போது நிலவுகின்ற வங்கியின் சொந்தச் செலாவணி வீதத்தில் அவசியமான எவையேனும் நாணய மாற்றல்களையும் பயனுறுத்தலாம். வங்கியின் உரிமை கணக்குவைத்திருப்பவரின் இறப்பினால் அல்லது வங்கிமுறிவினால் பாதிக்கப்படுதலாகாது.

## 8. நட்டோத்தரவாதம்

வங்கித்தொழில் வசதிகளை வழங்குதல் சம்பந்தமாக எவ்வகையிலும் எழுகின்ற; அல்லது ஏதேனும் கணக்கு / கணக்குகள் சம்பந்தமாக, அல்லது பொதுவாக இந்நியதிநிபந்தனைகள் தொடர்பில்; அல்லது இந்நியதிநிபந்தனைகளை வலுவுறுத்துவதிலும் வங்கிக்கு வருமதியான அல்லது எத்தன்மையினவையுமான எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகளில் வங்கியினால் ஏற்நேர்ந்த எவையேனும் தொகைகளை அறவிடுவதிலும் (சட்டப்படியான கட்டணங்களுட்பட ) எல்லாச் செலவுதொகைகளுக்கும் செலவுகளுக்குமெதிராக வங்கிக்கு முழுமையாக நட்டோத்தரவாதமளிப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

## 9. நியதிச்சட்ட வெளிப்படுத்துகை / செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதி

கணக்குவைத்திருப்பவர்;

(அ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு உறுப்பாண்மைப் படிவத்தில் கணக்கு வைத்திருப்பவரின் வரி நிலைமை பற்றிய நியதிச்சட்ட வெளிப்படுத்துகையை பூரணப்படுத்துவதற்கு உடன்படுகின்றார்.

(ஆ)வட்டிக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் விதிக்கப்படும் அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில் அக்காலப்பகுதிக்கு செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து வங்கியினால் கழிப்பனவு செய்யப்படும் என உடன்படுகின்றார்.

(இ) இதன்கண் அடங்கியுள்ள எல்லா நியதிகளும் நிபந்தனைகளும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது காலத்துக்குக்காலம் அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்தனவாகவிருக்கும் என உடன்படுகின்றார்.

## 10. PRVS/PRV/ELEVATE சேவை

(i) ஒன்றில் வங்கி அல்லது கணக்கு வைத்திருப்பவர், இந்த PRVS / PRV / ELEVATE சேவையின் பயன்பாட்டை மற்றைய திறத்தவருக்கு அது பற்றிய எழுத்திலான அறிவித்தல் மூலம் முடிவுறுத்துகின்ற பட்சத்தில், கணக்குவைத்திருப்பவர் தாமதம் அல்லது மேலதிக கோரிக்கையின்றி,

(அ) கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட எல்லா அட்டைகளையும் காசோலைப் புத்தகங்களையும் வங்கிக்கு திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

(ஆ) மேலதிகப்பற்று வசதிகள், கடன் அட்டை (அட்டைகள்) மற்றும் வேறு கடன் வசதிகளின் கீழான எல்லா தொடர்புபட்ட விதிப்பனவுகளுடனும் சேர்த்து அவ்வசதிகள் உட்படட ஆனால் அவற்றை வரையறுக்காமல் (கொடுப்பனவுக்கு அப்போது வங்கிக்கு முன்வைக்கப்படாத எவையேனும் விடயங்களின் தொகை உட்பட) வங்கிக்கு நிலுவையாகவுள்ள முழுத்தொகையையும் செலுத்துதல் வேண்டும்; அத்தகைய முடிவுறுத்துகை எவ்வாறிருப்பினும் கணக்கு வைத்திருப்பவர் அவற்றுக்கு முழுப் பொறுப்புடையவராதல் வேண்டும். மேற்போந்தவையின் பொதுமையை வரையறுக்காமல், அத்தகைய எல்லாத் தொகைகளும், கணக்கு வைத்திருப்பவரின் இறப்பு அல்லது வங்கிமுறிவின் விடயத்தில் (மேலதிக கோரிக்கையின்றி) உடனடியாக வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் வருதல் வேண்டும்.

(இ) ஒன்றில் வங்கி அல்லது கணக்கு வைத்திருப்பவர், இந்த PRVS / PRV / ELEVATE சேவையின் பயன்பாட்டை முடிவுறுத்துகின்ற பட்சத்தில், அல்லது அத்தகைய கணக்குகளுக்கு தேவைப்படுத்தப்பட்ட தொடக்கநிலையைப் பேணாமல் இருப்பதன் மூலம் PRVS / PRV / ELEVATE வாடிக்கையாளராக இல்லாதொழிகின்ற பட்சத்தில், சொல்லப்பட்ட கணக்கு (கணக்குகள்) தனிநபர் கணக்குகளுக்கான பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய வழமையான வங்கிக் கணக்குக்கு (கணக்குகளுக்கு ) மேவப்படுதல் வேண்டும்

என கணக்கு வைத்திருப்பவர் ஒப்புக்காள்கின்றார்.

**11.விதிப்பனவுகள்**

பக்கேஜ் தொடர்பில் வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்கான எல்லா நிருவாக, கையாளுகை, சேவை, நிதி அல்லது வேறு விதிப்பனவுகளும் கணக்குவைத்திருப்பவரினால் வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் எனவும் அந்நோக்கத்துக்கு காலத்துக்குக் காலம் வங்கி விதித்துரைக்கின்றவாறான அத்தகைய வீதங்களில் அறவிடப்படுதல் வேண்டும் எனவும் அத்தகைய எவையேனும் விதிப்பனவுகள் கணக்குவைத்திருப்பவரின் கணக்குக்கு பற்றுவைக்கப்படலாம் எனவும் கணக்குவைத்திருப்பவர் உடன்படுகின்றார். வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான எல்லா வட்டி வீதங்களும், நிருவாக, கையாளுகை, சேவை, நிதி அல்லது வேறு விதிப்பனவுகளும் வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என கணக்குவைத்திருப்பவர் அறிகின்றார்.

**12. விட்டுக்கொடுப்பு**

குறிப்பிட்டவொரு சந்தர்ப்பம் அல்லது சம்பவம் தொடர்பில் இந்நியதிநிபந்தனைகளுள் எவற்றினதும் வங்கியினாலான பொறுமை, அசட்டை அல்லது விட்டுக்கொடுப்பு எதுவும், அதனைக் கண்டிப்பாக வலுவுறுத்துவதற்கு அதன் பின்னர் வங்கிக்குள்ள உரிமையைப் பங்கப்படுத்துதலாகாது. வங்கியினாலான விட்டுக்கொடுப்பு எதுவும் எழுத்திலிருந்தாலொழிய, பயனுறுதலாகாது.

**13. அறிவித்தல்**

(i)இந்நியதிநிபந்தனைகளில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இந்நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது எவையேனும் வசதிகளுக்கான ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி வங்கியினால் செய்யப்பட்ட ஏதேனும் கோரிக்கை அல்லது அறிவித்தல் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பத்தில் கணக்குவைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்; அத்துடன் வித்தியாசமானவொரு முகவரி கணக்குவைத்திருப்பவரினால் எழுத்தில் அடுத்துப்பின்னர் அறிவிக்கப்பட்டாலொழிய, கணக்குவைத்திருப்பவரினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரின் பட்சத்தில், பிரதான கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் அனுப்பப்படுதல் வேண்டும்,அத்துடன் அஞ்சலிலிடப்படின், அஞ்சலிடும் திகதியின் பின்னர் வரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ii)வங்கியானது, வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் இந்நியதி நிபந்தனைகளை எந்நேரத்திலும் மாற்றுவதற்கான அல்லது அவற்றுக்குச் சேர்ப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது என வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளித்து ஒப்புக்கொள்கின்றார்.

**14. வெளிநாட்டு நாணயக் கணக்குகள் / கொடுக்கல்வாங்கல்கள்**

(i) வெளிநாட்டு நாணயக் கணக்கை (கணக்குகளை) திறத்தல் காலத்துக்குக் காலம் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் அத்துடன் / அல்லது ஒத்த அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்த ஆவணப்படுத்துகையைத் தேவைப்படுத்துமென கணக்கு வைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார். அவ்வாறு தேவைப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஆவணப்படுத்துகை, வங்கியில் கணக்கு (கணக்குகள்) திறக்கப்படுவதற்கு முன்னர் கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(ii) வெளிநாட்டுப் பயண அட்டைகள் (FTC), இலங்கை ரூபாக் கணக்குக்கும் (கணக்குகளுக்கும்) அதிலிருந்தும் (அவற்றிலிருந்தும்) வெளிநாட்டு நாணயத் தாள்கள், வெளியக அனுப்பீடுகள் மற்றும் உள்ளக அனுப்பீடுகள், முன்னோக்கிய

பதிவுக் கொடுக்கல் வாங்கல்களும் வெளிநாட்டு நாணயக் கணக்கும் (கணக்குகளும்) உட்பட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் வழங்குகை, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் அத்துடன் / அல்லது அதேபோன்ற அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளினால் பொதுவாக ஆளப்படுகின்றன; இவை காலத்துக்குக்காலம் முன்னறிவித்தலின்றி மாறலாம் என்பதுடன் இவற்றுக்காக வங்கி ஆளாக்கப்படுதலோ அல்லது பொறுப்பாக்கப்படுதலோ ஆகாது என்பதையும் கணக்கு வைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார்.

(iii) வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட ஏதேனும் கணக்குடன் (கணக்குகளுடன்) அத்துடன் /அல்லது முன்னோக்கிய பதிவுக் கொடுக்கல்வாங்கல்களுட்பட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த அபாயங்கள் இருக்க முடியுமென்பதை கணக்கு வைத்திருப்பவர் புரிந்துள்ளார். அதற்கிணங்க, அத்தகைய ஏதேனும் கணக்கு (கணக்குகள்) அத்துடன் / அல்லது வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல் (கொடுக்கல் வாங்கல்கள்) தொடர்பில், வரையறையின்றி, ஏதேனும் சர்வதேச அல்லது உள்நாட்டுச் சட்ட அல்லது ஒழுங்குபடுத்தும் மட்டுப்பாட்டிலிருந்து எழுகின்றவை உட்பட, எவ்வாறாயினும் எழுகின்ற அத்தகைய எல்லா அபாயங்களுக்கும் எவையேனும் செலவுதொகைகளுக்கும் செலவுகளுக்கும் கணக்கு வைத்திருப்பவர் மட்டுமே பொறுப்பாகவுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்; அத்துடன் அத்தகைய வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கலிலிருந்து (கொடுக்கல் வாங்கல்களிலிருந்து) எழுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கெதிராக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிக்கின்றார். அத்தகைய ஏதேனும் கணக்கின் (கணக்குகளின்) மீதான மீளப்பெறுதல்கள் அல்லது கையாளுகைகள், வங்கியின் இயைபான கிளையில் இயைபான நாணயம் கிடைக்கக்கூடியதாகவிருக்கின்றமைக்கும் அமைந்ததாகும். ஒரு நாணயத்திலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுதல், காலத்துக்குக் காலம் வங்கியினால் ( அதன் தனித்தற்றுணிபில்) தீர்மானிக்கப்பட்டவாறான செலாவணி வீதத்தில் இருத்தல் வேண்டும்.

**15. பெயர் நியமனம்**

பெயர் நியமனங்களுக்கான நியதி நிபந்தனைகள், தனிவேறாக பெயர் நியமனப் படிவத்தில் தரப்பட்டுள்ளவாறாகவிருக்கும்.

**16. ஐஅநாடுகளின் வெளிநாட்டுக் கணக்கு வரி இணங்கியொழுகுகைச் சட்டம் (FATCA)**

(i)கணக்குவைத்திருப்பவரினால் திறக்கப்பட்ட / பேணப்பட்ட / செய்யப்பட்ட அத்துடன் அல்லது மூடிவிடப்பட்ட கணக்கு (கணக்கு கள்) தொடர்பிலான எல்லாத் தகவல்களையும், அத்தகைய தகவல்களை வெளிவிடுவதற்கான தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கானவொரு கடமை / கடப்பாடு வங்கியின்மீது சுமத்தப்படுமிடத்து, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உள்ளக அரசிறைச் சேவைக்கு (IRS) அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு அல்லது வேறேதேனும் நியாயாதிக்கத்துக்கு அறிக்கையிடுவதற்கு அவருக்கு குறிப்பீடு செய்தோ அல்லது குறிப்பீடு செய்யாமலோ வங்கி இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(ii) இச்சம்மதம், (திருத்தப்பட்டவாறான) இலங்கையின் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 77 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின் படி வழங்கப்படுகின்றது.

(iii)என்னிடமிருந்து ஏதேனும் மேலதிகச் சம்மதமின்றி, FATCA வின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது வேறு நியாயாதிக்கத்தினால் / நியாயாதிக்கங்களினால் விதிக்கப்பட்ட / அல்லது விதிக்கப்படும் வேறேதேனும் ஒழுங்குவிதி / ஒழுங்குவிதிகளின்கீழ் எனது கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று வைப்பதன் மூலம், தேவைப்படின் IRS இற்கு, அல்லது வேறேதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு / சபைகளுக்குச் செலுத்தப்படத்தக்கதான எவையேனும் வரிகளை அத்துடன் / அல்லது அறவீடுகளை அனுப்புவதற்கு வங்கி மேலும் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(iv)தனது வதிவிட / பிரசாவுரிமை அந்தஸ்தில் எவையேனும் எதிர்கால மாற்றம் / மாற்றங்களைப் பற்றி வங்கிக்கு அறிவிப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் இத்தால் பொறுப்பேற்கின்றார்.

## 17. முறைப்பாட்டைக் கையாளுதல்

வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில் வங்கிக்கு அல்லது மிகக்கிட்டியதாகவுள்ள கிளைக்கு அல்லது வங்கியின் அழைப்பு மையத்துக்கு அல்லது தலைமையலுவலகத்துக்கு, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அல்லது அதன்கண் வழங்கப்பட்ட நடவடிக்கைமுறையின்படி வங்கியின் ஏதேனும் உத்தியோகபூர்வ வெளியீட்டின் அல்லது அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டவாறு கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டைச் செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். முறைப்பாடொன்று தீர்த்துவைக்கப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவர் நிதி குறைகேள் அதிகாரி மற்றும் மத்திய வங்கி ஊடாகத் தீர்வை நாடலாம்.

## 18. குறித்தளிப்பு

ஏற்புடையதான ஒழுங்குவிதிகளுக்கமைய, NDB வங்கியானது, கணக்கு வைத்திருப்பவரின் முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன் கீழான அதன் எவையேனும் அல்லது எல்லா உரிமைகளையும் குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆகவே, NDB வங்கியானது வேறு ஏதேனும் நிறுவனத்துடன் ஒன்றிணைகின்ற அல்லது ஒன்றுசேர்கின்ற பட்சத்தில், NDB வங்கியின் எல்லா உரிமைகளும் கடப்பாடுகளும் அத்தகைய ஒன்றிணைந்த அல்லது ஒன்றுசேர்ந்த நிறுவனத்துக்கு தன்னிச்சையாக கைமாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மைமாற்றத்துக்குப் பயன்கொடுப்பதற்கு அத்தகைய மேலதிக ஆவணம் எதுவும் தேவைப்படுத்தப்படுதலுமாகாது. அத்தகைய எடுத்துரைப்பு, குறித்தளிப்பு அல்லது கைமாற்றுகை காரணமாக கணக்குவைத்திருப்பவரின் உரிமைகள் குறைக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது கணக்குவைத்திருப்பவரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

## 19. இலத்திரனியல் வங்கிக்கூற்று

(i) இலத்திரனியல் வங்கிக்கூற்றொன்றைப் பெறும் நோக்கத்துக்காகச் செம்மையான மின்னஞ்சல் முகவரியை வங்கிக்குச் சமர்ப்பிப்பதற்கு கணக்குவைத்திருப்பவர் மட்டுமே பொறுப்பாகவுள்ளார் என இத்தால் உடன்படுகின்றார் என்பதுடன் Adobe Acrobat பதிப்பு 6 அல்லது அதன்பின்னர் வெளியிடப்படும் பதிப்புகள், கணக்கு வைத்திருப்பவரின் எந்த சாதனங்களிலிருந்து கணக்குவைத்திருப்பவர் இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்களை அணுகுகின்றேனோ அந்த சாதனங்களின் மீது நிறுவப்படுமென்பதையும் உறுதிப்படுத்துவார்; அத்துடன் அஞ்சற்பெட்டி, இடையீடின்றி இலத்திரனியல் வங்கிக் கூற்று பெறப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குக் கிரமமாக வெற்றாக்கப்படும்.

(ii) மாற்றமொன்று நிறைவேற்றப்படும் பட்சத்தில் புதிய மின்னஞ்சல் முகவரியை வங்கிக்கு வழங்குவதற்கு கணக்குவைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார்.

(iii) ஒரு பணவைப்புப் புத்தகம் / காலாகால இலத்திரனியல் வங்கிக்கூற்று, கணக்கு வைத்திருப்பவரின் கோரிக்கையின் பேரில் வழங்கப்படும், அதன் பாதுகாப்பு கணக்கு வைத்திருப்பவரின் பாதுகாப்பாக இருக்கும். பணவைப்புப் புத்தகம் காணாமல் போனால், திருடப்பட்டால் அல்லது இடந்தவறி வைக்கப்பட்டால் / இலத்திரனியல் வங்கிக்கூற்று இடைமறித்தல் அத்துடன் / அல்லது வேறு எவரேனும் ஆளினாலான குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு காரணமாக அனுப்பப்படாவிட்டால் அது பற்றி வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(iv) கணக்கு வைத்திருப்பவர் பணவைப்புப் புத்தகத்தை கிரமமாக இற்றைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் வங்கியை விட்டுச்செல்வதற்கு முன்னர், எல்லா வைப்புக்களும், வட்டியும் மற்றும் மீளப்

பெறுகைகளும் கணக்கு வைத்திருப்பவரின் திருப்திக்கு செம்மையாக பதியப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். வங்கியானது, கணினி மூலம் அச்சிடப்படாத அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் கீழ் பதியப்படாத எவையேனும் பதிவேடுகளுக்கு எத்தகையதுமான ஏதேனும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

(v) மீளப்பெறுகைகள் பணவைப்புப் புத்தகத்தை சமர்ப்பித்து உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட மீளப்பெறுகைப் படிவத்தினூடாக அதேபோன்று ATM ஊடாக மேற்கொள்ளப்படமுடியும். பணவைப்புப் புத்தகத்தை சமர்ப்பிக்கும் திறத்தவருக்கு வங்கியினாலான கொடுப்பனவுகளும் கணக்கு வைத்திருப்பவரினால் கையொப்பமிடப்பட்டதாக கொள்ளப்பட்ட தொடர்பான மீளப்பெறுகைப் படிவமும், யாராயினும் எவரேனும் ஆளின்பால் உள்ள பொய்யாக புனைதல், மோசடி அல்லது நேர்மையீனம் எவ்வாறிருப்பினும் செய்யப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் கணக்கு வைத்திருப்பவருக்கான எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் வங்கியை விடுவித்தல் வேண்டும்.

(vi) பணவைப்புப் புத்தகமொன்று காணாமல் போகின்ற அல்லது சேதமாக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது திருப்திகரமான விளக்கம் மற்றும் போதிய நட்டோத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளவதன் மீது கணக்கு வைத்திருப்பவரினால் பயனுறுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் அடங்கிய புதிய பணவைப்புப் புத்தகமொன்றை வழங்கலாம்; அது கணக்கு வைத்திருப்பவரினால் சரியானதாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். பணவைப்புப் புத்தகமொன்றை மீள வழங்குவதற்கு விதிப்பனவொன்று ஏற்புடையதாகும்.

**20. குறுஞ்செய்திச் சேவை (SMS) மூலமான விழிப்பூட்டல்கள்**

(i) குறுஞ்செய்திச் சேவை மூலமான விழிப்பூட்டல்கள் சேவைக்காக (சேவைகளுக்காக) பதிவுசெய்துள்ள அதன் கணக்குவைத்திருப்பவர்களுக்கு (வாடிக்கையாளர்கள்) வங்கியினால் / NDB வங்கியினால் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட அச்சேவைகளின் பாவனையானது எல்லா நேரங்களிலும் வங்கியின் குறிப்பிட்ட நியதிநிபந்தனைகளினால் ஆளப்படுதல் வேண்டும். இச்சேவைகளை அணுகுவதற்கு கணக்குவைத்திருப்பவர் அவரது / அவளது கையடக்கத்தொலைபேசியை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்; அதன் இலக்கம் வங்கியில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். கணக்குவைத்திருப்பவர் சிம் அட்டையையும் கையடக்கத்தொலைபேசியையும் எல்லா நேரங்களிலும் அவரது / அவளது உடைமையில் வைத்திருத்தல் வேண்டும். கணக்குவைத்திருப்பவர் வங்கியின் நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுவதற்குத் தவறும் விடயத்தில் கணக்குவைத்திருப்பவர் விளைவு களுக்காகத் தனிப்பொறுப்பையுடையவராதல் வேண்டும். வழங்கப்பட்ட கையடக்கத்தொலைபேசி இலக்கத்துக்கான (இலக்கங்களுக்கான) எவையேனும் மாற்றங்களை கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(ii)வங்கியின் தற்றுணிபில் மாற்றப்படக்கூடிய ஒவ்வொரு விளைபொருளுக்காகவும் வங்கியினால் வரைவிலக்கணங்கூறப்பட்ட குறைந்தபட்சக் கொடுக்கல்வாங்கல் தொடக்கநிலையின் அடிப்படையின் மீது வாடிக்கையாளர்களுக்கு SMS மூலமான விழிப்பூட்டல்கள் அனுப்பப்படும்.

(iii) NDB அழைப்பு மையத்தை அழைப்பதன் மூலம் வங்கிக்கான வாடிக்கையாளரின் கோரிக்கையொன்றின் மேல் சேவைகள் எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படலாம். அத்தகைய ஏதேனும் முடிவுறுத்துகை உடனடியாகப் பயனுறுதல் வேண்டும்.

(iv) நிகழ் இடைவெளியொன்றில் வங்கியுடனான வாடிக்கையாளரின் முதன்மை தனிநபர் கணக்கிலிருந்து

வங்கித் தொழில் கணக்குக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வங்கியானது SMS மூலமான விழிப்பூட்டல்கள் சேவையின் ஒப்பப்பணக் கட்டணத்தைப் பற்றுவைக்கும்; அச்சொல்லப்பட்ட கட்டணங்கள், அவை பற்றி வங்கியின் இணையத்தளத்தில் முன்னறிவித்தல் வழங்குவதன் மூலம் வங்கியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## 21. NDB டெபிட் அட்டைகள்

(i) இப்பிரிவில் பயன்படுத்தப்பட்ட பதங்கள், வேறுவகையாகக் கூறப்பட்டாலொழிய, இந்நியதி நிபந்தனைகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேணடும்.

(அ) ''ATM'' என்பது, உலகம் பூராகவும் NDB டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் தன்னியக்க ரெலர் பொறிகள் எல்லாம் எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஆ) ''அட்டை வைத்திருப்பவர்'' என்பது, கணக்கின் பொறுப்பாணைக்கிணங்க அதனைத் தொழிற்படுத்துவதற்கு அதிகாரமுள்ள ஆள் அல்லது ஆட்கள் எனப் பொருள்படுதல் வேணடும்.

(இ) ''அட்டை வசதி'' என்பது, ATM கொடுக்கல்வாங்கல்களும் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும் எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஈ) ''அட்டைக் கொடுக்கல்வாங்கல் / கொடுக்கல்வாங்கல்கள்'' என்பது, ATM மற்றும் விற்பனையிட முடிவிடங்களினூடாக (POS) செய்முறைப்படுத்துவதற்கு இயன்றனவாகவுள்ள எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் எனப் பொருள்படுதல் வேணடும்.

(உ) ''NDB டெபிட் அட்டை'' என்பது, ஏதேனும் புதுப்பித்தல் அல்லது மாற்றீட்டு அட்டை உட்பட ATM மற்றும் POS இனூடாகத் தொழிலைக் கொணடு நடாத்துவதற்கு அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட விசா அட்டை அல்லது வேறொரு வியாபாரப் பெயரின் கீழான வேறேதேனும் அட்டை எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஊ) ''PIN'' என்பது, NDB டெபிட் அட்டையை வழங்கும் போது அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட தனிநபர் ஆளடையாள இலக்கம் அல்லது NDB டெபிட் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகத் தன்னை ஆளடையாளங்காண்பதற்கு வங்கியுடன் ஒழுங்கேற்பாடு செய்யப்பட்டவாறு அட்டை வைத்திருப்பவரினால் அடுத்துப்பின்னர் பதிலீடு செய்யப்பட்ட இலக்கம் எனப் பொருள்படுதல் வேணடும்.

(எ) '' P O S '' என்பது, NDB டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் உலகம் பூராகவுமுள்ள வணிகர்களிடம் கிடைக்கக்கூடியனவாகவுள்ள விற்பனையிட முடிவிடங்கள் எனப் பொருள்படுதல் வேணடும்.

(ii) NDB டெபிட் அட்டையின் மீது அச்சிடப்பட்ட இலக்கத்தைக் குறித்து, விற்பனை உறுதிச்சீட்டில் கையொப்பமிடுவதன் மூலம் NDB டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் உலகம் பூராகவுமுள்ள சில்லறை விற்பனையாளர்களிடம் அல்லது வுழங்குநர்களிடம் அட்டை தொழிற்படுத்தல் பொறியொன்றைப் பயன்படுத்துவதன்மூலம் பண்டங்களுக்காக அல்லது சேவைகளுக்காகச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்தலாமென்பதுடன் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய ஏதேனும் அட்டைக் கொடுக்கல்வாங்கல் தொகையை, வங்கி கணக்குக்குப் பற்று வைக்கும்.

(iii) ATM களிலிருந்து பணம் மீளப்பெறுவதற்கு அட்டைவைத்திருப்பவர், PIN னுடன் சேர்த்து NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்தலாம். அட்டை வைத்திருப்பவரினால் அவ்வாறு மீளப்பெறப்பட்ட பணத்தொகை, கணக்குக்குப் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) உறுதிச்சீட்டொன்றில் கையொப்பமிடுவதன் மூலம் பணம்

மீளப்பெறுவதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட தாபனங்களிடமிருந்து பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு, NDB டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் ஏதேனும் வங்கியில் அட்டை வைத்திருப்பவர் NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்தலாம்; இதன் தொகை, கணக்குக்குப் பற்று வைக்கப்படுதல் வேணடும்.

(v) அட்டைவைத்திருப்பவருக்கு அட்டை வசதியை வழங்குதல் வங்கியின் தனித்தற்றுணிபிலும் அட்டை வசதியினூடாகச் செய்யப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் எல்லா நேரங்களிலும் பொறுப்பாகவிருக்கவேண்டிய அட்டைவைத்திருப்பவரின் அபாயத்திலும் இருத்தல் வேண்டும். அட்டை வசதி தொடக்கத்தில் அறுபது (60) மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு வழங்கப்படலாமென்பதுடன் வங்கியின் தனித்தற்றுணிபில் அத்தகைய காலப்பகுதியின் முடிவில் புதுப்பிக்கப்படற்பாலதாதலும் வேண்டும். எவ்வாறாயினும், வங்கி, எந்நேரத்திலும் அட்டைவைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றியும் எவையேனும் காரணங்கள் வழங்காமலும், NDB டெபிட் அட்டையை மீளப்பெறுதல், இரத்துச்செய்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தல் மூலம் அட்டை வசதியை முடிவுறுத்துவதற்குச் சுதந்திரமுடையதாதல் வேண்டும்.

(vi) அட்டை வைத்திருப்பவர் ஏழு (7) நாட்களுக்குக் குறையாத எழுத்திலான முன்னறிவித்தலை வங்கிக்குக் வழங்குதல் வேண்டுமென்பதுடன் அவரது தற்றுணிபில் இவ்வட்டை வசதியை ஒழிப்பதற்கு NDB டெபிட் அட்டையை உடனடியாக வங்கிக்குத் திருப்பிக்கொடுத்து, அதற்கான செல்லுபடியான பற்றுச்சீட்டைப் பெறுதலும் வேணடும்.

(vii) NDB டெபிட் அட்டை எல்லா நேரங்களிலும் வங்கியின் ஆதனமாகவிருத்தல் வேணடுமென்பதுடன், அட்டை வசதியைப் பயன்படுத்துவதற்கு வங்கி அதிகாரமளித்துள்ள அட்டை வைத்திருப்பவர் அதன் இணைப்பிரதியை எடுக்க எத்தனித்தலோ அல்லது அத்தகைய இணைப்பிரதி எடுத்தலைப் பின்தொடருதலோ ஆகாது.

(viii) கணக்கு (கணக்குகள்) மூடிவிடப்படின் அத்துடன் / அல்லது அட்டை வைத்திருப்பவர் இறப்பின் அல்லது NDB டெபிட் அட்டையைத் திருப்பித்தரும்படி அட்டை வைத்திருப்பவரை வங்கி தேவைப்படுத்தும் போதெல்லாம் வங்கியானது NDB டெபிட் அட்டையை மீள அழைப்பதற்கு / மீளப்பெறுவதற்கு உரித்துடையதாகும்.

(ix) NDB டெபிட் அட்டையின் இரத்துச்செய்தல் அல்லது மீளப்பெறுதல் பற்றிய ஏதேனும் அறிவிப்பு வங்கியினால் அல்லது வங்கியின் சார்பில் எவரேனுமாளினால் அட்டைவைத்திருப்பவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்னர் வங்கியிடமான கணக்கு எக்காரணத்துக்காகவும் மூடிவிடப்படின், NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்தாது அல்லது பயன்படுத்த எத்தனிக்காது தவிர்ப்பதற்கும் இரத்துச் செய்யப்படுவதற்காக NDB டெபிட் அட்டையைத் திருப்பிக்கொடுப்பதற்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார். NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்தும் நோக்கத்துக்காக PIN பயன்படுத்தப்படுவதுடன், இந்நோக்கத்துக்காகப் பதிலீடு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கம் (இலக்கங்கள்) கண்டிப்பாக அந்தரங்க மானவையாகவுமுள்ளன. எச்சூழ்நிலைகளின் கீழும் தன்னிச்சையாகவும் அல்லது வேறு வகையிலும் எவ்வழிவகைகள் மூலமும் PIN எவரேனும் மூன்றாந் திறத்தவருக்கு வெளிவிடப்படுதலாகாது. NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதற்கு மூன்றாந் திறத்தவரை இயலச்செய்யக்கூடிய ஏதேனும் இடத்தில் அல்லது முறையில் PIN இன் ஏதேனும் எழுத்திலான பதிவை அட்டைவைத்திருப்பவர் பேணுதலாகாது.

(x) அட்டை வைத்திருப்பவர், எல்லா நேரங்களிலும், NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் எவ்வாறாயினும் செய்யப்பட்ட எவையேனும் அட்டைக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பொறுப்பாவாரென்பதுடன், NDB டெபிட்

அட்டையின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டினால் அல்லது தொடர்புபட்ட PIN இன் பயன்பாட்டினால் எவ்வாறாயினும் விளைவிக்கப்பட்ட எல்லா இழப்புக்களுக்காகவும் / சேதங்களுக்காகவும் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் வேண்டும்.

(xi) இவ்வட்டை வசதி எந்த அட்டை வைத்திருப்பவருக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுகின்றதோ அந்த அட்டை வைத்திருப்பவரினால் மட்டுமே அது பயன்படுத்தப்படுதல் வேணடுமென்பதுடன் NDB டெபிட் அட்டையில் வழங்கப்பட்ட இடத்தில் அவர் தனது கையொப்பத்தை இடுதலும் வேண்டும். அவர் எல்லா நேரங்களிலும் NDB டெபிட் அட்டையின் இழப்பையும் / திருட்டையும் அவரது PIN பற்றி எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் அறியவருவதனையும் தடுப்பதற்கு இயன்றவெல்லாக் கவனத்தையும் பிரயோகித்தல் வேணடும். அட்டை வைத்திருப்பவர் இருவிடயங்களிலும் வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேணடும். இழப்பு / திருட்டு அல்லது PIN இன் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய அறிவித்தல் பெறப்பட்டுள்ளதென அட்டைவைத்திருப்பவருக்கு வங்கி உறுதிப்படுத்தும் அத்தகைய காலம் வரை, NDB டெபிட் அட்டையின் பயன்பாடு மூலம் பயனுறுத்தப்பட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக அட்டை வைத்திருப்பவர் முழுப்பொறுப்பையும் ஏற்றல் வேண்டும்.

(xii) கூட்டு அட்டை வைத்திருப்போர், NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட எல்லா அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

(xiii) அட்டை வைத்திருப்பவர், NDB டெபிட் அட்டையுடன் இணைந்துள்ள அவரது கணக்கிலிருந்து (கணக்குகளிலிருந்து) மிகையாக மீளப்பெறுதலாகாது அல்லது வங்கியுடன் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஏதேனும் மேலதிகப்பற்று எல்லைகளுக்கு அல்லது கணக்கில் (கணக்குகளில்) கிடைக்கக்கூடியனவாகவுள்ள நிதிகளுக்கு மிகையாக NDB டெபிட் அட்டையின் பயன்பாட்டின் மூலம் நிதிகளை மீளப்பெறுதலாகாது / கைமாற்றுதலாகாது அல்லது வேறெம்முறையிலும் கொடுக்கல் வாங்கல் செய்தலாகாது.

(xiv) அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட NDB டெபிட் அட்டையும் PIN னும் கைமாற்றப்படத்தக்கனவல்ல மற்றும் அவரது பிரத்தியேக பயன்பாட்டுக்கு மட்டுமேயாகும். அட்டை வைத்திருப்பவர், PIN னைக் கண்டிப்பாக அந்தரங்கமானதாக வைத்திருப்பதற்குப் பொறுப்பாவாரென்பதுடன், எச்சூழ்நிலையின் கீழும் எந்நேரத்திலும் அவரது PIN னை எவரேனுமாளுக்கு வெளிக்காட்டாதிருப்பதற்கும் பொறுப்பேற்கின்றார்.

(xv) அட்டைவைத்திருப்பவரின் அறிவுடன் அல்லது அதிகாரத்துடன் அல்லது அதுவில்லாமல் NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட்ட எவையேனும் மீளப்பெறுதல்களின்/ கைமாற்றல்களின்/ கொடுப்பனவுகளின் தொகையை அட்டைவைத்திருப்பவரின் பெயர்குறிக்கப்பட்ட கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்றுவைப்பதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஏதேனுமொரு நாளில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தத் தொகை, காலத்துக்குக்காலம் வங்கியினால் அட்டைவைத்திருப்பவருக்கு அறிவிக்கப்படவேணடிய அத்தகைய தொகைகளுக்கும் அத்தகைய வேறு நிபந்தனைகளினாலும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(xvi) மேற்படி வரையறை எவ்வாறிருப்பினும், NDB டெபிட் அட்டையினூடாக அல்லது வேறேதேனும் உள்நாட்டு வலையமைப்பினூடாக உள்நாட்டில் அல்லது சர்வதேசரீதியில் செய்யப்பட்ட அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சட்டப்படியான அல்லது வேறு நியதிச்சட்ட முறையான விதிப்பனவுகளுட்பட, எல்லா விதிப்பனவுகளையும் அட்டை வைத்திருப்பவரின் பெயர்குறிக்கப்பட்ட கணக்குக்கு (கணக்குகளுக்கு) பற்று

வைப்பதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது.

(xvii)இலங்கை ரூபாக்கள் அல்லாத நாணயங்களில் பயனுறுத்தப்பட்ட எல்லா அட்டைக் கொடுக்கல்வாங்கல்களும், வங்கியினால் அறவிடப்பட்ட மேலதிக சதவீதத்துடனும் வங்கிக்கு விசா இன்டர்நஷனலினால் விதிப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் அட்டைக் கொடுக்கல்வாங்கல் கட்டணத்துடனும் (கட்டணங்களுடனும்) சேர்த்து மாற்றல் திகதியன்று விசா இன்டர்நஷனலினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலாவணி வீதத்தினால் தீர்மானிக்கப்பட்ட செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களாக மாற்றப்பட்டதன் பின்னர் அட்டைக்கணக்குக்குப் பற்றுவைக்கப்படும்.

(xviii) எவையேனும் அட்டைக் கொடுக்கல்வாங்கல்களின் ஏதேனும் இரத்துச்செய்தல், எதிர்மாறாக்கல் அல்லது மீளளித்தலிலிருந்து விளையக்கூடிய ஏதேனும் செலாவணி இழப்புக்காக அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாவார்.

(xix) ATM திரையில் அல்லது ATM இனால் வழங்கப்பட்ட அச்சிடப்பட்ட விசாரிப்புத்துண்டில் அல்லது பற்றுச்சீட்டில் கூறப்பட்ட தொகை, எத்தகையதுமான எந்நோக்கததுக்காகவும் வங்கியிடமான பெயர் குறிக்கப்பட்ட கணக்கின் (கணக்குகளின்) நிலைமை பற்றி முடிவான சான்றாக எடுக்கப்படுதலாகாது என அட்டை வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கிறார். NDB டெபிட் அட்டையின் பயன்பாட்டினால் செய்முறைப்படுத்தப்பட்ட அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவேடு, வாசகங்கள் 21(xi), 21(xii), 21(xiii) மற்றும் 21(xiv) என்பவற்றுக்கமைய எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாகவும் பிணிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

(xx) NDB டெபிட் அட்டையின் பயன்பாட்டின் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பதிவு, அட்டை வைத்திருப்பவருக்கு அனுப்பப்பட்ட வழமையான வங்கிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; அவர் ஒவ்வொரு கூற்றையும் பரிசீலனை செய்து அதன்கண் ஏதேனும் சார்த்தப்பட்ட பிழை இருப்பின், அதனை அத்தகைய கூற்றுத்திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் வங்கிக்கு அறிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவார்; அத்தகைய காலப்பகுதிக்குப் பின்னர் அதன்கண்ணுள்ள வங்கிக்கூற்றுகளும் பதிவுகளும் (அவ்வாறு அறிவிக்கப்பட்ட எவையேனும் பிழைகளைத் தவிர) எல்லா நோக்கங்களுக்காகவும் வங்கிக்கும் அட்டை வைத்திருப்பவருக்குமிடையே சரியானவையென முடிவானமுறையில் கருதப்படுதல் வேண்டும்.

(xxi) பின்வருவனவற்றுக்கான பொறுப்பு எதனையும் வங்கி ஏற்பதில்லை:

(அ) NDB டெபிட் அட்டைக்கு மதிப்பளிப்பதற்கும் அல்லது அதனை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது முழுமையான அதிகாரமளிக்கப்பட்ட வரையறைக்கு வசதிகளை நீடிப்பதற்கும் ஏதேனும் வணிகத் தாபனத்தின் மறுப்பு அல்லது தவறுகை.

(ஆ) NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெறப்பட்ட பண்டங்களிலான மற்றும் சேவைகளிலான ஏதேனும் குறைபாடு அல்லது குறைவுபாடு.

(இ) NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளைப் பெறுவதற்கு அட்டை வைத்திருப்பவர் எந்த விளம்பரப்படுத்துதல், பிரசித்த அல்லது மேம்படுத்துகை விடயத்தினால் உந்தப்பட்டாரோ அல்லது ஊக்குவிக்கப்ப ட்டாரோ அந்த ஏதேனும் விளம்பரப்படுத்துதல், பிரசித்த அல்லது மேம்படுத்துகை விடயத்தில் செய்யப்பட்ட அல்லது அடங்கியுள்ள ஏதேனும் செம்மையற்ற முறையீடுகள்.

(ஈ) ஏதேனும் ATM அல்லது தொடர்பாடல் முறைமை அல்லது வசதிகள் அல்லது தரவுச் செய்முறை முறைமை அல்லது அனுப்புகை இணைப்பிலான ஏதேனும் குலைவு அல்லது தவறுகை அல்லது குறைபாடு காரணமாக அல்லது அதிலிருநது எழுகின்ற எத்தன்மையினதுமான ஏதேனும் வசதியீனம், இழப்பு, சேதம் அல்லது தடுமாற்றம் அல்லது வேறு கைத்தொழில் அல்லது

வேறு பிணக்கு அல்லது வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அல்லது வேறுவகையான வேறேதேனும் காரணம்.

(xxii) அட்டை வைத்திருப்பவர், எல்லா நேரங்களிலும், NDB டெபிட் அட்டையின் பயன்பாட்டினாலான எல்லா அட்டைக் கொடுக்கல்வாங்கல்களும் பின்வருமாறிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(அ) அட்டைக் கொடுக்கல்வாங்கல் நேரத்தில் நிலவுகின்ற செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கிணங்கவிருத்தல் (பூலோகம் முழுவதிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் சொந்தச் செலவுகளுக்காக அட்டைவைத்திருப்பவரினால் NDB டெபிட் அட்டையின் பயன்பாடு உட்பட ஆனால் அதற்கு வரையறுக்கப்படாமல்); அத்துடன்

(ஆ) சட்ட நோக்கங்களுக்காகவிருத்தல் மூன்றாந் திறத்தவர்கள் சார்பில் வெளியகக் கொடுப்பனவுகள், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளின் மீறுகையாக உள்ளனவெனக் கவனிக்கப்படலாம்.

(xxiii) வங்கி தோதானதெனக் கருதக்கூடிய ஏதேனும் முறையில் காலத்துக்குக்காலம் நியதிநிபந்தனைகளை மாற்றியமைப்பதற்கான, வேறுபடுத்துவதற்கான, மாற்றுவதற்கான, மீளப்பெறுவதற்கான, புதுப்பிப்பதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அட்டை வைத்திருப்பவருக்கான அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய மாற்றியமைத்தல் பயனுறும் திகதிக்குப்பின்னர் NDB டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மேல் அத்தகைய மாற்றியமைத்தலை அட்டைவைத்திருப்பவர் தனி ஒதுக்கீடின்றி ஏற்றுக்கொண்டுள்ளாரெனக் கருதப்படுவார் அத்தகைய மாற்றியமைத்தலை அட்டை வைத்திருப்பவர் ஏற்காவிடின், NDB டெபிட் அட்டை வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டு அதற்காகச் செல்லுபடியான பற்றுச்சீட்டு பெறப்படுதல் வேண்டும்.

(xxiv) வங்கியானது அதற்காக அட்டை வைத்திருப்பவரின் முன்னங்கீகாரத்தை பெறாமல் இதன்கீழான அதன் உரிமைகளுள் எவற்றையும் இன்னொரு திறத்தவருக்குக் குறித்தளிப்பதற்கு உரிமை கொண்டிருத்தல் வேணடும்.

**22. வைப்புக் காப்புறுதியின் காப்பு**

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ (NDB வங்கி) இற்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் உரிமம் இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்படுகின்ற பட்சத்தில், காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அதிகபட்ச தொகை வரை தகைமையுடைய வைப்பாளர்களுக்கு நட்டஈடளிப்பதற்கென, இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட நடைமுறையில் உள்ள பணிப்புக்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் எல்லாத் தகைமைகொண்ட வைப்புக்களும் காப்புறுதிசெய்யப்படுகின்றன.

**23. பொதுவான ஏற்பாடுகள்**

(i)தடுக்கொணா வல்இக்கட்டு நிகழ்வொன்று உட்பட, அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட எவையேனும் காரணங்களுக்காக (நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்) ஏதேனும் சேவையை வழங்குவதற்கான அல்லது இதன் கீழ் வருமதியான எவையேனும் கடப்பாட்டைத் தீர்வுசெய்வதற்கான ஏதேனும் தவறுதல் அல்லது தாமதத்திற்கு வங்கி பொறுப்பாதலாகாது.

(ii) வழங்கப்பட்ட விளைபொருட்கள் மற்றும் சேவைகளுள் எவற்றுக்கும் அவை தொடர்பிலான நியதிநிபந்தனைகளுக்கும் முழுமையாக அல்லது பகுதியளவில் சேர்ப்பதற்கான, அவற்றை மீளாய்வதற்கான, திருத்துவதற்கான, அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய ஏதேனும் சேர்த்தல், மீளாய்வு, திருத்தம், இரத்துச்செய்தல் அல்லது மாற்றங்கள், அவை வங்கியின்

உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும் அத்தகைய நேரத்திலிருந்து பயனுறுவதாகி கணக்கு வைத்திருப்பவர் மீது பிணிப்பனவுமாகும்.

(iii) வங்கியானது, கணக்கு வைத்திருப்பவர்களின் வங்கிக்கான எல்லாப் பொறுப்புக்களின் கொடுத்துத் தீர்த்தலை உரிமைகோருவதன் மூலம் கணக்கு வைத்திருப்பவருக்கு நியாயமான அறிவித்தலை வழங்குவதன் மூலம் கணக்கை முடிவுறுத்துவதற்கும் அதன் பின்னர் கணக்கில் உள்ள மீதியை வங்கியின் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றுக்கு கைமாற்றுவதற்குமான உரிமையைக் கொண்டுள்ளது.

(iv) கணக்கு வைத்திருப்பவர், முகவரி உட்பட கணக்கு வைத்திருப்பவரின் தனிப்பட்ட விபரங்களுக்கான எவையேனும் மாற்றங்கள் பற்றி தாமதமின்றி வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(v) வங்கியானது, சந்தை நிலைமைகளைப் பொறுத்து நிலவுகின்ற பரிசுத் திட்டத்தை மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது என்பதுடன் அத்தகைய மாற்றங்கள் வங்கியின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படும் அத்துடன் வங்கியின் ஒவ்வொரு கிளையின் அறிவித்தல் பலகைகளில் பதிவிடப்படும்.

**24. ஆளுகின்ற சட்டம்**

இந்நியதிநிபந்தனைகள், இலங்கைச் சட்டத்தினால் ஆளப்பட்டு அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கையின் நீதிமன்றங்களின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்கு இத்தால் இல்லாதொழிக்க முடியாத வகையில் கணக்குவைத்திருப்பவர் கீழ்ப்படிகின்றார். அத்தகைய கீழ்ப்படிதல், எவ்வாறாயினும், வேறேதேனும் நியாயாதிக்கத்தில் அவருக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளைக் கொண்டுவருவதற்கு வங்கிக்குள்ள உரிமையைப் பாதித்தலாகாது.

**வாடிக்கையாளர் வெளிப்படுத்துகை**

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி உடனான எனது / எமது கணக்குத் தொடர்பு மேலேயுள்ள நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தனவாகும் என நான் / நாம் இத்தால் உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்கின்றேன்/ ஒப்புக்கொள்கின்றோம்; அவற்றை நான் / நாம் வாசித்து, விளங்கப்படுத்தப்பட்டு, விளங்கிக்கொண்டு அவற்றினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம். வங்கியினால் காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தக் கூடியவாறான எவையேனும் மேலதிக விபரங்களை அல்லது ஆவணங்களை வழங்குவதற்கு நான் / நாம் பொறுப்பேற்கின்றேன்/ பொறுப்பேற்கின்றோம். என்னால் / எம்மால் வழங்கப்படும் எவையேனும் தகவல்களில் ஏதேனும் மாற்றம் நிகழ்கின்ற பட்சத்தில், அதுபற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிப்பதற்கு நான்/நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.